# வானவில்

# VAANAVIL

இதழ் 148 | சித்திரை 2023

ISSUE 148 | APRIL 2023


# இடதுசாரிகளின் ஒற்றுமை காலத்தின் கட்டாய தேவை!



இலங்கை இன்று முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு பல பாரிய நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கிறது. இந்த நெருக்கடிகள் புதியவை அல்ல, ஏற்கெனவே இருந்தவைதான். ஆனால் இப்பொழுது புதிய பரிமாணத்தையும் வளர்ச்சியையும் எட்டி நிற்கின்றன.

எல்லா மூன்றாம் உலக நாடுகளைப் போலவே இலங்கையும் நீண்ட காலம் (சுமார் 400 வருடங்கள்) மேற்கத்தைய காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த நாடுதான். இப்பொழுது நேரடிக் காலனித்துவ ஆட்சி இல்லாவிடினும், மறைமுகமான காலனித்துவ ஆட்சி, அதாவது நவ காலனித்துவ ஆட்சி நிலவுகின்றது. அதனால், சுதந்திரம் பெற்று 75 வருடங்களைக் கடந்த பின்னரும் ஏகாதிபத்திய வட்டிக்கடைக்காரனான சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தி நிற்கிறோம்.

இலங்கையின் தற்போதைய பிரதான நெருக்கடி பொருளாதாரப் பிரச்சினையும், அதனால் எழுந்த விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், அபிவிருத்தியின்மை, இனப்பிரச்சினை என்பனவுமாகும். இவற்றைத் தீர்ப்பதாகச் சொல்லி இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் உருவான எல்லா அரசாங்கங்களுமே மேலும் மேலும் பணம் படைத்தவர்களினதும், ஏகாதிபத்திய நாடுகளினதும் தயவில் தங்கி நின்றதால், நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்த நெருக்கடிகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக முதலாளித்துவ ஆளும் வர்க்கங்கள் (அவை எந்தக் கட்சியினராக இருந்தாலும்) இன, மத, மொழி முரண்பாடுகளைப் பயன்படுத்தி மக்களை ஒருவரோடு ஒருவர் மோதவிட்டு வந்திருக்கின்றன. அதன் மூலம் மக்களின் உண்மையான பிரச்சினைகளான பொருளாதாரச் சுரண்டல், ஏகாதிபத்திய ஆதிக்கம் என்பன பின் தள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினைகளைச் சரியான முறையில் தீர்ப்பதற்கு இயலுமான கட்சிகள் இடதுசாரிக் கட்சிகள்தான். இலங்கை சுதந்திரமடைந்த நேரத்திலும் பின்னரும் இடதுசாரிக் கட்சிகளுக்கு இதற்கான சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் அந்தக் கட்சிகள் தேவையற்ற முரண்பாடுகளால் பிளவுபட்டு நின்றதால், அவர்களது சக்தி விரயமாகி, படிப்படியாகத் தேய்ந்து, இன்று மிகவும் பலவீனப்பட்டுப் போய் நிற்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை, பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் 1935 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சியே முதலாவது அரசியல் கட்சியாகும். அந்தக் கட்சி தனது கொள்கையாக பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை பூரண சுதந்திரம் பெறுவதையும், சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கையில் தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கம் ஒன்றை அமைப்பதையும் தனது கொள்கையாக அறிவித்தது. உண்மையில் இது, அன்றைய காலகட்டத்தில் உலகில் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த மற்றைய நாடுகளில் ஏற்படாத ஒரு சிறப்பு நிலைமையாகும்.

சமசமாஜக் கட்சியின் இந்தக் கொள்கைகளால் இலங்கையின் பல்வேறு பிரிவு மக்களும் ஈர்க்கப்பட்டனர். அதனால் அந்த மக்கள் கட்சியைச் சுற்றி அணிதிரளத் தொடங்கினர். அதனால் இடதுசாரிகள் கணிசமான பலம் வாய்ந்தவர்களாக இருந்தனர்.

அப்பொழுது உலகில் சோவியத் யூனியன் மட்டுமே ஒரேயொரு சோசலிச நாடாக இருந்தது. அந்த நாட்டை அழிப்பதற்கு உலக ஏகாதிபத்திய சக்திகள் எல்லாமே கங்கணம் கட்டி நின்றன. அவற்றின் முயற்சியை சோவியத் யூனியனுக்கு சிறப்பாகத் தலைமைதாங்கிய ஸ்டாலின் ஒன்றன்பின் ஒன்றாக முறியடித்து வந்தார். ஆனாலும், சோவியத் புரட்சிக்கு

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# தடுமாறும் 'பெரிய ஜனநாயகம்'

2019 ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத் தேர்தலின் போது, கர்நாடகா மாநிலம் கோலாரில் நடந்த பிரச்சாரக் கூட்டமொன்றில் பேசிய ராகுல் காந்தி, "எல்லா திருடர்களுக்கும் எப்படி மோடி என்பது பொதுவான குடும்பப்பெயராக இருக்கிறது?" என்று பேசியிருந்தார். இதற்கு குஜராத் மாநிலத்தின் சூரத்தில் (Surat) பாரதிய ஜனதாக்கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் பூர்னேஷ் மோடி என்பவர் ராகுல் காந்திக்கு எதிராக குற்றவியல் அவதூறு வழக்குத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், மார்ச் 23ந் திகதி ராகுல் குற்றவாளியென அறிவித்ததுடன், 2 ஆண்டுகால சிறைத்தண்டனையையும் விதித்தது. இதையடுத்து, ராகுல் காந்தி பாரளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி இழந்ததாகவும் பாராளுமன்றச் செயலகம் அறிவித்தது.

அவதூறு வழக்கில் குற்றவாளியென அறிவித்த சூரத் நீதிமன்ற தீர்ப்புக்கு இடைக்கால தடை கோரி, ராகுல் காந்தி மேல்முறையீடு செய்தார். ஏப்ரல் 20ம் திகதி, இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் அவர் பாரளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி இழப்பு செய்யப்பட்டது தொடரும் நிலை உருவாகியுள்ளது.

2014 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியிலமர்ந்திருக்கும் மோடி தலைமையிலான பா.ஜ.க, எதிர்க்கட்சிகளை தொடர்ச்சியாக ஒடுக்கி வருகின்றது. கடந்த பொதுத்தேர்தலில் வெறும் 52 ஆசனங்களையே வென்று (பா.ஜ.கவிற்கு 303 ஆசனங்கள்) பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சி, மிகவும் பலவீனமாகவே இருக்கின்றது. எப்படியிருப்பினும், அடுத்த இந்தியப் பொதுத்தேர்தலுக்கு இன்னமும் ஒரு வருடம் இருக்கும் நிலையில், காங்கிரஸ் கட்சி ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து மதச்சார்பற்ற ஆட்சியை மீள நிறுவி விடுவார்களோ என்ற அச்சம் பா.ஜ.கவினருக்கு இயல்பாகவே இருக்கத்தான் செய்யும். குறிப்பாக அண்மைக்காலமாக ராகுல் காந்திக்கு மக்களிடையே வளர்ந்து வரும் செல்வாக்கும், பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் அவர் நேரடியாக மோடியைத் தாக்கிப்பேசி வருவதும் ஆளுங்கட்சிக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமராக மோடி பதவியேற்ற பிறகு தான் கௌதம் அதானி அதிகமாக வளர்ச்சி அடைந்தார். உலக பணக்கார பட்டியலில் இரண்டாவது இடத்திற்கு அதானி வந்தார். 8 பில்லியன் டொலர் சொத்து மதிப்பில் இருந்து, அவரது சொத்து மதிப்பு 140 பில்லியன் டொலர் அளவிற்கு உயர்ந்தது. இதனால் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கும் அதானிக்கும் உள்ள தொடர்பு பற்றி பாரளுமன்றத்தில் ராகுல் காந்தி தொடர்ச்சியாகவே கேள்விகளை எழுப்பிய வண்ணமிருந்தார். (அமெரிக்காவைச் சேர்ந்த ஆய்வு நிறுவனமான Hindenburg வெளியிட்ட ஆய்வறிக்கையால் அதானி குழுமத்தின் பங்குகள் கடுமையான சரிவைச் சந்தித்தன. அதனைத் தொடர்ந்து, அவரது சொத்து மதிப்பு 43.4 பில்லியன் டொலராகக் குறைந்து, உலகப் பணக்காரர்கள் வரிசையில் கௌதம் அதானி தற்போது 26வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்)

சூரத் தீர்ப்பு வருவதற்கு முன்னதாக, ராகுல் காந்தி இலண்டன் சென்றிருந்தார். அப்போது, இந்தியாவில் ஜனநாயகம் மோசமான நிலையில் இருப்பதாகவும், பாராளுமன்றத்தில் பேசுவதற்கு பல தடைகள் இருப்பதாகவும், ஆர்.எஸ்.எஸ் அனைத்து அதிகார மையங்களிலும் ஊடுருவியிருப்பதாகவும், உலகத்திற்கே முன்னுதாரணமாக இருந்த ஜனநாயக நாடான இந்தியாவில் தற்போது நிலைமை மாறியிருப்பதாகவும் அவர் அங்கே பேசியிருந்தார். இந்தப் பேச்சுக்கு ராகுல் காந்தி மன்னிப்புக் கேட்க வேண்டுமெனக் கோரி பாரதிய ஜனதாக்கட்சியினர் பாராளுமன்றத்தை முடக்கிவைத்திருந்த நிலையிலேயே சூரத் தீர்ப்பு வெளிவந்துள்ளது.

'பாரத் ஜோடோ' (Bharath Jodo) என்ற பெயரில் ராகுல் காந்தி நடத்திய நடைப்பயணம் ஜனவரி 30ம் திகதி நிறைவடைந்தது. மொத்தமாக 150 நாட்களில் 4,000 கிலோமீட்டரை நடந்தே நிறைவு செய்திருக்கிறார் ராகுல். சமீபகாலத்தில், இந்தியாவில் நடைபெற்ற மிகப்பெரிய நடைப்பயணம் இதுதான். இதனால் ராகுல் காந்தி குறித்து பா.ஜ.க கட்டமைத்து வைத்திருந்த பிம்பம் மாறியுள்ளது. ராகுல் அரசியல் புரிதல் இல்லாதவர், ஒரு வளம் நிறைந்த கஷ்டம் தெரியாத குடும்பத்தின் வாரிசு, இந்தியா குறித்து சொற்பளவில்தான் தெரிந்து வைத்திருப்பவர் என்கிற பிம்பங்கள் எல்லாம் மாறி, மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் வீதியில் இறங்கி இரத்தமும் வியர்வையுமாகப் போராடும் ஒரு தலைவன் என்கிற பிம்பத்தை ராகுல் காந்திக்கு இந்த நடைப்பயணம் உருவாக்கித் தந்திருக்கிறது.

ராகுல் பாரளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்து, 2004 ஆம் ஆண்டிலிருந்து அவர் டெல்லியில் வசித்து வந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய வீட்டிலிருந்து வெளியேறுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் டெல்லியிலுள்ள தனது தாயார் சோனியாவின் வீட்டில் சாமானியனாக வசித்து வருகிறார்.

இந்தியா உலகின் 'பெரிய ஜனநாயகம்' என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் மோடி தலைமையிலான இந்தியா ஜனநாயகத்தின் பெயரை உச்சரித்துக்கொண்டே, கடந்த 9 ஆண்டுகளாக ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து, இந்துத்துவா சர்வாதிகாரத்தை அரங்கேற்றுகிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

**சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் – சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர் குழு

# மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பு முறை மாறும் வரை இந்தப் போராட்டம் தொடரும் – பகத்சிங்

இதுவரை உலகில் எண்ணற்ற பல மனிதர்கள் வாழ்ந்து இறந்துள்ளனர். ஆனால் ஒரு மரணம் மட்டும் உலக மக்களின் தூக்கத்தை தொலைத்தது. சூரியன் மறையாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை குலைநடுங்க செய்தது. ஒரு மரணம் இந்திய விடுதலைக்கு அடிகோலியது. ஒரு மரணம் எல்லோரையும் ஒரே மையப்புள்ளியில் சங்கமிக்க செய்தது. ஒரு மரணம் சாவையும் வாழவைத்தது. ஒரு மரணம் சூரியனை சுட்டெரித்தது. ஒரு மரணம் மரணத்தைக் கொன்று புதைத்தது. ஒரு மரணம் பிறிதொரு மரணத்தைக் கண்டு அஞ்சி நடுங்கியது. ஒரு மரணம் முழு பௌர்ணமி நாளை இருளாக்கியது. தன் மரணத்தை, மரணத்தாலே வாழவைத்தவர்தான் தோழர் பகத்சிங். பகத்சிங் மறைந்து ஏறக்குறைய ஒரு நூற்றாண்டாகப் போகிறது. இன்றும் மார்ச் 23ஆம் நாள் அன்று அவர் குறித்த வரலாறு நம் சிந்தனையை தழுவுகிறது. இந்தியர்கள் நாடு விடுதலை அடைந்ததை எந்த அளவிற்கு கொண்டாடுகிறோமோ, அதே அளவிற்கு பகத்சிங், சுகதேவ், ராஜகுருவின் மரணத்தை நினைக்கும் பொழுது சோகம் நம்முள் குடிகொள்கிறது.

தோழர் பகத்சிங், இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக தன் உயிரைக் கொடுத்ததை போன்றே உள்நாட்டு பிரச்சனைகளிலும் கவனம் செலுத்தியவர். ஆனால் அவரை ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் என்று சொல்லியே நம் மூளை சலவை செய்யப்பட்டுள்ளது.

அவர் இந்தியாவில் நிலவிய சாதி கொடுமையை எதிர்த்துள்ளார். சாதிக் கொடுமைக்கு காரணமாக இருந்த இந்து மதக்கொடுங்கோன்மையை எதிர்த்து களமாடினார். விடுதலைப் போராட்டங்களை இந்துத்துவ மற்றும் முஸ்லிம் மதவாத கிரிமினல் கும்பல்கள் பிளவுபடுத்துவதை கவனித்து அவற்றை கடுமையாக சாடியவர். நாட்டில் வெடித்த மத கலவரத்தின் காரணமாக மத நம்பிக்கையை மறுக்கத் தொடங்கினார். ஒரே நேரத்தில் இந்திய விடுதலைப் போராட்ட களம் சாதி மத எதிர்ப்பு என்று தன்னுடைய இலக்கை தீர்மானித்து சனாதன சக்திகளை எதிர்த்தும், பிரிட்டிஷ்



ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் தன்னுடைய இறுதி மூச்சு உள்ளவரை போராடினார். இந்தியாவில் மதவாத பிரச்சனைகளின் அடிப்படை எங்கிருந்து வருகிறது என்பதையும் சாதிய தீண்டாமை எவ்வளவு இழிவானது என்பதையும் இளைஞர்கள் மத்தியில் விரிவாக விளக்கினார். நாட்டில் வெடித்த மதக்கலவரத்தின் காரணமாக மத நம்பிக்கையை மறுக்கத் தொடங்கினார். இந்தியாவை விடுதலை அடையச் செய்வது மட்டுமல்ல இந்திய முதலாளிகளிடமிருந்தும், உழைக்கும் மக்களுக்கும் விடுதலை பெற்றுத்தர வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தவர்.

**பேராசிரியர் எ. பாவலன்**

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் சுதந்திர குடியரசை நிறுவுவது, ஓர் ஐக்கிய இந்திய அரசை நிறுவிட இளைஞர்களிடையே தேசப்பற்றை ஊட்டுவது, மதவாத போக்குகள் அற்ற தொழில் மற்றும் சமூக இயக்கங்களை ஆதரிப்பது, தொழிலாளர்களையும் விவசாயிகளையும் திரட்டுவது போன்ற அரசியல் நோக்கங்களுடன் இளைஞர்கள் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில் மக்களை அரசியல் படுத்த நினைத்த நினைத்தார். இவை எல்லாவற்றிற்கும் காரணம் அவரின் தெளிந்த அரசியல் பார்வை.

அப்பொழுது மார்க்சியம் அவருக்கு வர்க்க பார்வையை ஊட்டியது. மதவாத பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒரே வழி வர்க்க போராட்டங்களே என தனது இருபதாவது வயதில் பிரகடனப்படுத்திக் கொண்டார். விரல் விட்டு எண்ணக்கூடிய சில ஒட்டுண்ணிகளால் இந்தியா உழைக்கும் மக்களும் அவர்தம் இயற்கை வளங்களும் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கும் வரை இந்த போர் தொடரும், தொடர வேண்டும். கலப்பற்ற பிரிட்டிஷ் முதலாளியாக இருக்கலாம் அல்லது பிரிட்டிஷ் முதலாளிகள், இந்திய முதலாளிகளின் கலப்பாக இருக்கலாம். அல்லது கலப்பற்ற இந்திய முதலாளிகளாகக் கூட இருக்கலாம் என்று தெளிந்த சிந்தனை கொண்டவர்.

அதன் அடிப்படையில் சிறையில் இருந்தபோது ‘நான் ஏன் நாத்திகன் ஆனேன்’ என்ற நூலையும் படைத்தார்.

கடவுள் நம்பிக்கையும், மதக் கோட்பாடும் அவரிடம் எள்ளளவும் இருந்ததில்லை. தூக்கு கயிற்றின் முன்னால் நின்ற பகத்சிங்கிடம் சிறை வார்டன் சரத் சிங் கடவுளை போற்றி துதிக்கும் சீக்கியர்களின் புனித வார்த்தையை நினைவில் கொள்ள வலியுறுத்தினார். அதற்கு பகத்சிங் அதை மறுத்து ‘வாழ்க்கையில் நான் ஒருபோதும் கடவுளை வணங்கவும் இல்லை, போற்றவும் இல்லை. உண்மையில் ஏழைகளின் துயரம் கண்டு கடவுளை விமர்சித்துள்ளேன். அதற்காக இப்பொழுது மன்னிப்பு கேட்டால் என்னைவிட கோழை யாரும் இருக்க முடியாது. இறுதி காலம் வந்து விட்டதால் மன்னிப்புக் கேட்கிறான் என மக்கள் தூற்றுவர்’ என்று மறுத்துவிட்டார்.

தன் கொள்கையில் இத்தனை உறுதிப்பாடு மிக்க காரணமாக இருந்தது அவருடைய குடும்பம் என்று சொல்ல முடியும். அவருடைய குடும்பம் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக சிறை கம்பிகளுக்கு பின்னால் நின்றவர்கள். அதனால் அவருக்கு, இளம் வயதிலேயே சுதந்திரப் போராட்ட உணர்வும், உறுதியான கொள்கையும் பசுமரத்து ஆணி போல் ஆழமாக பதிந்தது. பகத்சிங் பிறந்தநாளில் தாத்தா மற்றும் அஜித் சிங், சவரவன் சிங் ஆகிய இரண்டு மாமாக்களும் சிறையில் இருந்து வெளியான நாளாகவே அமைந்தது.

ஆயுதம் தான் பிரிட்டிஷ் ஆட்சியை நாட்டை விட்டு துரத்தும் என்ற கொள்கை இளம் வயதிலேயே இருந்துள்ளது. பகத்சிங் சிறுவனாக இருந்தபோது தந்தை கிஷன் சிங்சந்துடன் வயலுக்கு சென்றார். அப்பொழுது இந்த தானியங்கள் எப்படி வந்தது? என்ற கேள்விக்கு, தந்தை ஒரு விதையிலிருந்து இத்தனை மகசூல் கிடைத்தது என்றார். எல்லாவற்றையும் கவனமாக கேட்டு வந்த அந்தச் சிறுவன், சற்று நேரத்தில் அவனுடைய குரல் கேட்கவில்லை. அவருடைய தந்தை திரும்பி பார்த்தார். அப்பொழுது கொஞ்சம் தூரத்தில் அந்த சிறுவன் வயலில் குழிதோண்டி எதையோ நட்டு கொண்டு இருந்தான். அவனுடைய அப்பா என்ன செய்கிறாய் என்று கேட்டதற்கு, அச்சிறுவன் நான் ஒரு துப்பாக்கியை நடுகிறேன். அது இன்னும் சில நாட்களுக்குப் பிறகு மரமாகி எல்லா கிளைகளிலும் துப்பாக்கிகள் காய்த்து தொங்கும் என்று கூறினான். அப்படி சொல்லும் பொழுது பகத்சிங்குக்கு வயது ஐந்து.

எண்ணம் தான் ஒரு மனிதனை உருவாக்கும். எண்ணம் தான், தான்யார் என்பதை இவ்வுலகிற்கு உணர்த்தும். எண்ணம் தான் மாற்றத்தை உண்டாக்கும். எண்ணம் தான் போராடும் எண்ணத்தை உருவாக்கும். போராடும் எண்ணம் கொண்ட ஒவ்வொரு மனிதனும் பகத்சிங் வரலாற்றை எளிதாக கடக்க முடியாது. இந்திய விடுதலைக் கனவு பகத்சிங் கண்களில் மின்னியது. எப்படியாவது தன் காலத்திலேயே இந்தியா சுதந்திரம் பெற்று விட வேண்டும் என்று உறுதியாக இருந்தவர். அதன் தாக்கம் தான் புரட்சி என்பது மனித சமுதாயத்தில் பிரிக்க முடியாத ஓர் அங்கம். சுதந்திரம் என்பது ஒவ்வொரு குடிமக்களின் பிறப்புரிமை அதை யாரும் தடுக்க முடியாது என்ற கொள்கைக் கோட்பாட்டுடன் செயலாற்றியவர்.


தன்னுடைய *14* வது வயதில் நெஞ்சு உறுதியுடன் நாட்டு விடுதலைக்காக காந்தியடிகளுடன் இணைந்து பணியாற்றியவர். ஆனால் அவருடைய ஒத்துழையாமை இயக்கம் காந்தியை விட்டு விலகுவதற்கு ஒரு காரணமாக இருந்தது. அதன்பிறகு இளம் புரட்சியாளர்கள் இயக்கத்தில் இணைந்து மக்கள் விடுதலைக்காக பணியாற்றியவர்.

பகத்சிங்கின் திசைவழி பயணத்தை மாற்றியது ஜாலியன் வாலாபாக் படுகொலை. *1919* ஏப்ரல் *13* இல் நடந்த அந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவம் அவர் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த படுகொலைக்குப் பிறகு அவர் நிம்மதி இன்றி இருந்தார். அன்று அவருக்கு வயது பனிரெண்டு. பனிரெண்டு வயது சிறுவனாக இருந்த பகத்சிங் அந்தப் படுகொலை நடந்த சில மணித்துளிகளிலேயே காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதைப் போல் மனித சடலங்கள் மிதந்துக் கிடந்தன. மனித சடலங்களின் இருந்து ஒழுகிய ரத்தம் மண்ணில் கலந்து உறைவதற்கு முன்பாகவே அந்த ரத்தம் கலந்த மண்ணை ஒரு பிடி எடுத்து ஒரு பாட்டிலில் நிரப்பி வைத்துக் கொண்டார். இந்த மண் தான் அவரை உறங்கவிடாமல் செய்தது. இந்த மண்தான் அவரை விடுதலைக்கான பாதையை சமைக்கச் சொல்லி கற்றுத்தந்தது. இந்த மண்தான் அவர் கண்களை சிவப்பாக்கியது. இந்த மண்தான் அப்பாவி மக்களின் உயிரைக் குடித்த வெள்ளைப் பரங்கியர்களின் துப்பாக்கிகளிலிருந்து வெளியேறிய ரவைகளுக்கு பதில் சொல்லத் தூண்டியது.

ஒரு பக்கம் ஜாலியன் வாலாபாக் படுகொலை மற்றொரு பக்கம் லாலா லஜபதிராயின் மரணம். லாலா லஜபதி ராய் சைமன் கமிஷனை எதிர்த்து போராடிய காரணத்திற்காக அன்றைய பிரிட்டிஷ் ஏவலர்கள் அவரை அடித்து கொலை செய்தனர். இந்த கோர சம்பவம் இன்னும் கோபத்தின் உச்சாணிக்கே அவரை கொண்டு சென்றது. அல்லது அவரை மரணத்துடன் இணைத்தது என்று சொல்ல முடியும்.

லாலா லஜபதிராயை அடித்து கொன்ற காட் என்ற வெள்ளையனை சுட்டுக் கொல்வதற்கு நாள் குறிக்கப்பட்டது. லாலா லஜபதிராய் கொலை செய்யப்பட்டது நவம்பர் *17*. டிசம்பர் *17* ஸ்காட்டுக்கு தேதி குறிக்கப்பட்டது. ஆனால் விதி அவனை வேறு திசையில் அழைத்துச் சென்றது. ஸ்காட்டுக்கு விரித்த வலையில் சாண்டர்சன் விழுகிறான். அவன் கொலை செய்யப்படுகிறான்.

இந்தக் கொலையை ஹிந்துஸ்தான் ரிபப்ளிக்கன் அசோசியேசன் அமைப்பு முன்னெடுத்தது. அதை முன் நின்று நடத்தியவர் இருவர் ஒருவர் பகத்சிங் மற்றொருவர் சுகதேவ். இந்தக் கொலையை அந்த அமைப்பும்



நியாயப்படுத்தவும் இல்லை, மறுக்கவும் இல்லை. சாண்டர்சன் ஒரு துருப்பாக இருந்தான் அதனால் அவனை கொலை செய்தோம். இந்தப் போர் எங்களோடு தொடங்கவும் இல்லை எங்களோடு முடியப்போவதுமில்லை மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பு முறை மாறும் வரை இந்த போராட்டம் தொடரும் நாளைய இளைஞர்கள் தொடர்வார்கள் என்று எழுதி ஆங்காங்கே சுவரொட்டிகளாக ஒட்டப்பட்டு இருந்தது. இந்தியாவை விடுதலை அடையச் செய்வது மட்டுமல்ல இந்திய முதலாளிகளிடமிருந்து உழைக்கும் மக்களும் விடுதலையைப் பெற்றுத் தர வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தவர்.

தவறென்றாலும், ஒரு மனிதனை கொலை செய்யும் அளவுக்கு, இந்திய சுதந்திர கனல் அவர் நெஞ்சில் எரிந்து கொண்டிருந்தது. இதற்கிடையில் நாடாளுமன்றத்தில் குண்டு வீசுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. அதற்கு பகத்சிங்கே தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டார். சுகதேவ் பகத்சிங்கிடம் பாராளுமன்றத்து குண்டு வீசுவதற்கு செல்லக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்த பின்பும், பகத்சிங் மற்றும் டெட் இருவரும் பாராளுமன்ற குண்டு வீச்சில் தேர்வாகினர்.

*1929* ஏப்ரல் *8*ஆம் நாள் காலை *11.00* மணி அளவில் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் யாருக்கும் எந்த அசம்பாவிதம் ஏற்படாமல் குண்டு வீசப்பட்டது. அந்த குண்டு வீச்சு காட்சியைப் பார்த்தவர்கள் சிதறி ஓடினர். பகத்சிங் கையில் வைத்திருந்த துப்பாக்கியும் அவர் எறிந்த குண்டும் அவரது மரண தண்டனைக்கு ஆளானது.

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# அமெரிக்க டொலரைக் கை கழுவும் ஆசியான் நாடுகள்

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) உறுப்பு நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில், அமெரிக்க டொலர், யூரோ, யென் மற்றும் பவுண்ஸ் ஆகிய நாணயங்களை நிதிப்பரிமாற்றத்திற்கு பயன்படுத்திட வேண்டாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். ஆசியான் அமைப்பில் புருனேய், கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் உள்ளன. சர்வதேச நிதியத்தின் (IMF) கணக்குப்படி, இந்த நாடுகளின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு *3.9* டிரில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டுகிறது.

ஆசியான் நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கலந்து கொண்ட கூட்டம் இந்தோனேசியாவில் நடைபெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் உள்ளூர் நாணயங்களைக் கொண்டே நிதிப்பரிமாற்றங்களை செய்ய வேண்டும் என்றும், அமெரிக்க டொலர், யூரோ, யென் மற்றும் பிரிட்டனின் பவுண்ஸ் ஆகிய நாணயங்களைப் பயன்படுத்துவதைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்றும் விவாதித்திருக்கிறார்கள். கடந்த நவம்பர் மாதத்திலேயே, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் அவரவர் நாணயங்களைப் பயன்படுத்துவதற்கான உடன்பாட்டை எட்டின. இந்தக் கூட்டத்தில் பேசிய இந்தோனேசியாவின் ஜனாதிபதி ஜோகோ விடோடோ (Joko Widodo) , "உள்ளூர் கடன் அட்டைகளை நாம் பயன்படுத்தத் தொடங்க வேண்டும். வெளிநாட்டு நிதிப்பரிமாற்ற அமைப்புகளைத் தவிர்க்கலாம். உக்ரைன் சச்சரவைக் காட்டி ரஷ்யாவின் நிதித்துறை மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.




இதுபோன்ற நிலைமைகளைச் சமாளிக்க நமது நாடுகளுக்குப் பாதுகாப்பு வளையம் தேவைப்படுகிறது" என்றார்.

மேலும் பேசிய அவர், "மேற்கத்திய நிதிப் பரிமாற்ற அமைப்புகளிடம் இருந்து விலகிச் செல்ல வேண்டியது தேவையாகி விட்டது. ஒரு வேளை பிராந்திய அரசியல் விளைவுகளில் இருந்து பாதுகாக்க வேண்டுமென்றால் இதைச் செய்தாக வேண்டும். நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ரஷ்யா மீது அமெரிக்காபோட்ட தடைகளை நாம் நினைவில் வைத்துக் கொள்வது அவசியமாகும். விசா மற்றும் மாஸ்டர் கார்டு போன்றவை பிரச்சனைகளாக மாறலாம்" என்று குறிப்பிட்டார். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பெரிய பொருளாதாரமான பிரேசில், சீனாவுடன் ஒரு உடன்பாட்டை எட்டியிருக்கிறது. இரு நாடுகளுக்கிடையிலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின்போது அமெரிக்க டொலரை பயன்படுத்தாமல் இருக்கப் போகிறார்கள். மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்க நாடுகளான ஈராக், ஐக்கிய அரபு இராச்சியம், எகிப்து மற்றும் சவூதி அரேபியா போன்றவை அமெரிக்க டொலர் பயன்பாட்டைக் குறைப்பதில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

**பிரிக்ஸின் (BRICS) புதிய நாணயம்**

முன்னேறி வரும் பொருளாதாரங்களான பிரிக்ஸ் நாடுகள் புதிய நாணயம் கொண்டு வருவது பற்றிப் பேசிக் கொண்டிருப்பதாக ரஷ்ய நாடாளுமன்றத்தின் துணைத்தலைவர் அலெக்சாண்டர் பாபாகோவ் (Alexander Babakov) தெரிவித்துள்ளார். தென் ஆப்பிரிக்க நகரம் டப்ளினில் நடைபெறவிருக்கும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் அந்தப் புதிய நாணயம் பற்றிய அறிவிப்பு வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரிக்ஸ் நாடுகள் உலக மக்கள் தொகையில் 40 விழுக்காட்டையும், உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 விழுக்காட்டையும் கொண்டவையாகும்.

---

**14ம் பக்கத்தொடர்ச்சி...**

இயற்கைத் தேவைகள் அவரது நாட்டின் வெப்பதட்ப நிலைமைகளுக்கும் பௌதிக நிலைமைகளுக்கும் ஏற்ப மாறுபடுகின்றன. மறுபுறம் அவரது அவசியத் தேவைகள் என்பவற்றின் தொகையும் அளவும், அதே போல் அவற்றை நிறைவு செய்கிற முறைகளும் வரலாற்று வளர்ச்சியிலிருந்து விளைகிறவை. எனவே, அவை பெருமளவுக்கு நாடு நாகரிக வளர்ச்சியில் எந்நிலையை அடைந்துள்ளது என்பதையும், இன்னும் குறிப்பாக, எப்படிப்பட்ட நிலைமைகளிலும் எம்மாதிரியான பழக்க வழக்கங்களுடனும் வசதிகளின் வளர்ச்சி நிலையுடனும் சுதந்திரத் தொழிலாளர்களின் வர்க்கம் உருவெடுத்தது என்பதையும் பொறுத்தவை. ஆகவே, ஏனைய சரக்குகளின் மதிப்பு நிர்ணயத்தில் போலல்லாமல், உழைப்புச் சக்தியின் மதிப்பு நிர்ணயத்தில் வரலாற்று – தார்மிகக் கூறு ஒரு காரணியாக இடம் பெறுகிறது. எனினும் குறிப்பிட்ட நாட்டில், குறிப்பிட்ட காலத்தில், உழைப்பாளிக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் சராசரி அளவு நடைமுறை வாயிலாகத் தெரிந்து விடுகிறது.

# ஆனந்தபுரம் யுத்தம் பற்றிய சில தகவல்கள்!

இங்கு குறிப்பிடப்படும் தகவல்கள் 2009 மார்ச் 31 முதல் ஏப்ரல் 4 வரை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆனந்தபுரம் பகுதியில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நிகழ்ந்த சமர் பற்றிய நிகழ்வுகளாகும்.

இந்த மோதலின் போது பல தளபதிகள் உட்பட 625 உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் இழந்தனர். இது நடந்து ஆறு வாரங்களின் பின்னர் முள்ளிவாய்க்காலில் புலிகளை இராணுவம் முற்றுமுழுதாகத் தோற்கடித்தது. அதில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் கொல்லப்பட்டார்.

புலிகள் அரச படைகளுடன் போரிட்டு வடக்கு கிழக்கின் பல பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன், தமது தனியான நிர்வாக நடவடிக்கைகளையும் அப்பகுதிகளில் மேற்கொண்டிருந்தனர். ஆனால் 2007 இல் இருந்து அவர்கள் இராணுவத்திடம் தோல்வியடையத் தொடங்கினர்.

2008 இல் கிளிநொச்சியில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து புலிகள் பரந்தனிலும் தோல்வி கண்டனர். 2009 இல் ஆனையிறவிலும் தோல்வியடைந்தனர். ஏ 9 வீதியின் (யாழ்ப்பாணம் – கண்டி வீதி) மேற்குப் பகுதி முழுவதையும் புலிகள் இழந்த பின்னரும் கூட, கிழக்குப் பகுதியை இராணுவம் கைப்பற்ற நீண்ட காலம் எடுக்கும் எனப் புலிகள் நம்பினர். கடைசிப் பாதுகாப்பு இடமாக சுமார் 450 சதுர கிலோமீட்டர் பரப்பளவு உள்ள கடற்கரையைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தைப் புலிகள் நம்பியிருந்தனர். ஆனால் தொடர்ச்சியான இராணுவத்தின் முன்னேற்றம் புலிகளுக்கு அதிர்ச்சி அளிப்பதாய் அமைந்தது.

இராணுவத்தின் முன்னேற்றம் காரணமாக, புலிகளும் பொதுமக்களும் பரந்தன் – முல்லைத்தீவு வீதிக்கும் நந்திக்கடல் மற்றும் சோலை கடல் ஏரிகளுக்கும், இன்னொரு பக்கம் கடலுக்குமிடையிலான சிறியதொரு பிரதேசத்தில் சிக்கிக் கொண்டனர். முப்படைகளினதும் (தரை, கடல் மற்றும் வான்) 5 டிவிசன்கள் புலிகளைச் சுற்றி வளைத்தன. புலிகள் இந்தச் சுற்றி



வளைப்பை உடைக்க முயன்று, 2009 பெப்ருவரியில் சிறிதளவு வெற்றியும் பெற்றனர். புலிகளின் இந்த நடவடிக்கைக்கு மூத்த தளபதிகளான சொர்ணம் மற்றும் லோறன்ஸ் ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஆனால் இராணுவத்தினர் மார்ச் மாதத்தில் திரும்பவும் அணிவகுக்கத் தொடங்கிவிட்டனர். இராணுவம் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் திரும்பவும் தமது முன்னைய நிலைகளைக் கைப்பற்றித் தனது நிலையைப் பலப்படுத்திக் கொண்டது. இதனால் புலிகள் மீண்டும் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

புலிகளின் வடமுனை தளபதி தீபன் உட்பட பல தளபதிகள் இணைந்து ஆனந்தபுரத்தில் இராணுவத்துக்கு எதிராகப் பாரிய தாக்குதல் ஒன்றுக்குத் திட்டமிட்டனர். சுமார் 1,000 புலிகள் வரை திரட்டப்பட்டு, இராணுவத்துக்கு எதிரான பதில் தாக்குதலை ஆரம்பித்தனர். புலிகளின் தலைவர் பிரபாகரனும் அந்த இடத்துக்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டார். அப்பொழுது புதுக்குடியிருப்பு – இரணைப்பாலை – புதுமாத்தளன் வீதி புலிகளின் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் பாதுகாப்பில் இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் இராணுவத்தினர் ஆளில்லா விமானங்களை (ட்ரோன்) பயன்படுத்த ஆரம்பித்தனர். அத்துடன், இராணுவத்தின் பிரிகேடியர் சவேந்திர சில்வா தலைமையிலான 58 ஆவது படைப்பிரிவு, ஜெனரல் கமல் குணரத்தின தலைமையிலான 53 ஆவது படைப்பிரிவு, கேர்ணல் ஜிவி ரவிப்பிரிய தலைமையிலான எட்டாவது இலகு காலாட்படை என்பன 2009 மார்ச் 30 ஆம் திகதி தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தன. அவர்களது படைகள் புலிகளின் நிலைகள் வரை முன்னேறிச் சென்றன.

பச்சைபுல்லுமோட்டைப் பகுதியில் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் விசேட தளபதி கோபிநாத் மற்றும் தளபதி அமுதாப் ஆகியோரின் தலைமையிலான புலிகள் இராணுவத்துக்கு எதிராக கடுமையாகப் போரிட்டனர். ஆனால் மார்ச் 31 ஆம் திகதி அவர்கள் இருவரும் கொல்லப்பட்டு விட்டதாகத் தகவல் வந்தது. இது புலிகளுக்கு பெரும் இழப்பாக அமைந்தது. புலிகளின் உறுப்பினர்களுக்கு மனச்சோர்வையும் ஏற்படுத்தியது. அத்துடன் ஆனந்தபுரத்தில் இருந்த புலிகள் தனித்தும் போனார்கள்.

முக்கியமான புலிகள் ஆனந்தபுரத்தில் சிக்கிக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டதுடன், பிரபாகரனும் அங்கிருக்கலாம் எனச் சந்தேகித்த இராணுவம் முன்னேறிச் சென்று புலிகளின் நிலைகளைச் சுற்றிவளைக்கும் முயற்சியில் இறங்கியது. ஆனால் பிரபாகரன் மார்ச் 26 அன்று அங்கிருந்து புறப்பட்டு விட்டார். தீபன் உட்பட

முக்கியமான தளபதிகளே அங்கிருந்தனர்.

4, 6, 8, 12, 14 மற்றும் 20 ஆம் திகதிகளில் கஜபா படைப் பிரிவுகள், 5ஆவது விஜயபாகு படைப்பிரிவு, 9 ஆவது கெமுனு படை, 11 மற்றும் 20 ஆவது இலகு படையணிகளின் விசேட படை, இரண்டு கொமாண்டோ படையணிகள் என்பன நடவடிக்கையில் இறங்கின. அம்பலவன் பொக்கணையிலிருந்து பச்சைப்புல்லுமோட்டை வரை இருந்த புலிகளின் அவசர விநியோகப் பாதை இராணுவத்தால் துண்டிக்கப்பட்டது. சுமார் 1,000 வரையிலான புலிப் போராளிகள் சுமார் 2 சதுர கிலோமீட்டர் அளவிலான நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டனர்.

தமது சகாக்களுக்கு உதவுவதற்காக புலிகளின் கடற்படையின் விசேட தளபதி சூசை 80 பேரை 15 வள்ளங்களில் கடல் மூலம் அனுப்பி வைத்தார். இந்த வள்ளங்கள் வலைஞர்மடத்திலிருந்து புறப்பட்டு, பட்டியடி கடற்கரைக்கு அருகில் இறங்கி போரிடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடற்படை விழிப்புடன் இருந்ததால் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை.

ஏற்கெனவே காயமடைந்திருந்த தளபதி லோறன்ஸ் தலைமையில் 120 பேரை புலிகள் அனுப்பி வைத்தனர். ஆனால் இராணுவம் நடத்திய தாக்குதலில் அவர்கள் சென்ற இரண்டு பஸ்களும் ட்ரக்கும் சேதமடைந்ததுடன், அதில் பயணம் செய்த பல புலிகளும் கொல்லப்பட்டனர். எஞ்சிய புலிகளும் தளபதி லோறன்சும் மிகுதியாக இருந்த பஸ்களில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர். அதே நேரத்தில் ஏப்ரல் 3 ஆம் திகதி ஏற்கெனவே காயம் பட்டிருந்த கேணல் பானுவும், சில புலிகளும் இராணுவ சுற்றிவளைப்பை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

ஆனால் புலிகளின் பிரதி இராணுவத் தளபதியாகவும், வடமுனைத் தளபதியாகவும் இருந்த தீபன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தப்பிச் செல்ல முயற்சிக்கவில்லை. தன்னுடன் தப்பி வரும்படி பானு அழைத்தும் அதைத் தீபன் நிராகரித்து விட்டார். அதற்கு அவர் சொன்ன காரணம், தன்னுடைய போராளிகளை நட்டாற்றில் விடத் தான் விரும்பவில்லை என்பதாகும். போராளிகளுடன் தானும் சேர்ந்து இறக்க விரும்புவதாக பானுவிடம் தெரிவித்த தீபன், இந்தத் தகவலைப் பின்னர் பொட்டம்மானுக்கும் ரேடியோ செய்தி மூலம் அறிவித்துவிட்டார். தீபனின் இந்த உரையாடலை இடைமறித்துக் கேட்ட இராணுவத்தினர் அவரது நேர்மையையும் விசுவாசத்தையும் கண்டு அதிசயித்துப் போயினர்.

இராணுவத்தினர் இடைமறித்துக் கேட்ட இன்னொரு உரையாடலில், புலிகளின் பெண்கள் அணித் தளபதி விதுசா, மேலதிக போராளிகளையும், ஆயுத தளபாடங்களையும் அனுப்பி வைக்கும்படி, புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மானிடம் கேட்ட பொழுது, இராணுவத்தின் சுற்றிவளைப்பு காரணமாகத் தனது முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்து விட்டதாக பொட்டம்மான் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளைச் சரணடையும்படி பல தடவைகள் இராணுவம் தமிழில் வேண்டுகோள் விடுத்த போதிலும், ஒரு சந்தர்ப்பத்தில் 116 புலிகள் மட்டுமே சரணடைந்தனர். ஏனையோர் தொடர்ந்து போராடுவதில் திடசங்கற்பமாக இருந்தனர்.

ஏப்ரல் 3 ஆம் திகதி யுத்தத்தின் போக்கில் பாரிய திருப்பம் ஏற்பட்டது. 3 ஆம் திகதி இரவு தொடங்கி 4, 5ஆம் திகதிகளில் இராணுவம் விமானங்கள் மூலமும் ஹெலிகொப்டர்கள் மூலமும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டது. பீரங்கிகள் மூலம் பெருந்தொகையான ஷெல்களும் ஏவப்பட்டன. இதில் பல புலிகள் உயிரிழந்தனர். திங்கட்கிழமை 525 இறந்த புலிகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டு, அதில் 60 உடல்கள் அடையாளம் காணப்பட்டன. செவ்வாய்க்கிழமை மேலும் 100 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இறந்தவர்களில் சிலர் ‘சைனைட்’ விசக் குப்பிகளைக் கடித்து மரணமடைந்தது தெரிய வந்தது. 20 வரையிலான புலிகள் காயங்களுடன் உயிருடன் கைது செய்யப்பட்டனர். இராணுவம் வெளியிட்ட இறந்தவர்களின் சில படங்களில் சிரேஸ்ட தளபதிகள் தீபன், விதுசா ஆகியோரின் படங்களும் உள்ளடங்கி இருந்தன.

இறந்தவர்களில் தீபன், விதுசா ஆகியோருடன், கமலினி, தூர்க்கா, சோபிதா, மோகனா, மாணிக்கபோடி மகேஸ்வரன் (கீர்த்தி), செல்வரத்தினம் சுந்தரம் (நாகேஸ்), கடாபி, அமுதன், சிலம்பரசன், குட்டி, கோபால், சேரலாதன், ரூபன், பஞ்சன், நேரு, அன்ரன், மான்குயில், அமுதா, இனியவன், ஆதித்தியன், சித்ராங்கன், மகிந்தன் ஆகிய முக்கியமான தளபதிகள் அடங்குவர். அன்பு, அஸ்மி ஆகிய முக்கிய தளபதிகள் காயத்துடன் உயிருடன் பிடிக்கப்பட்டனர்.

ஆனந்தபுரம் யுத்தத்தில் புலிகள் விமான எதிர்ப்பு பீரங்கிகள் உட்பட தமது பெரும்பாலான ஆயுதங்களையும் இழந்தனர்.

ஆனந்தபுரம் யுத்தம் குறித்துப் பின்னர் இலங்கை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட ஒரு அறிக்கையில், புலிகளின் வீரதீரத்தை மெச்சியிருந்ததுடன், அவர்கள் தவறான திசையில் வழிநடத்தப்பட்டு தமது உயிர்களை வீணாக இழந்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டுள்ளது.

(இந்தக் கட்டுரைக்கான சில தகவல்கள் சிரேஸ்ட ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் ‘டெயிலி மிரர்’ பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து பெறப்பட்டதாகும்)

## சோசலிச நாட்டின் சாதனைகள்

**1941** ஆம் ஆண்டு முதல் 1945 வரையான நான்கு ஆண்டு காலம், சோவியத் ரஷ்யாவானது ஜெர்மனியின் பாசிச இராணுவத் தாக்குதலை தனி ஒரு நாடாக எதிர் கொண்டு, இறுதியில் முறியடித்தது. சோவியத் ரஷ்யா கடுமையான பொருளாதார நாசத்திற்கும் உயிரிழப்பிற்கும் உள்ளானாலும், வெகுவிரைவிலேயே பழைய வளர்ச்சியை எட்டிபிடித்தது; 1949 இல் அணுகுண்டு சோதனையை நடத்தியது; பின்னர் ஐதரசன் குண்டு சோதனையை நடத்தியது; விண்வெளியில் ரொக்கெட்டை ஏவியது. இவையெல்லாம் ஏகாதிபத்திய நாடுகளின் துணையின்றி சுயேச்சையான சோசலிச பொருளாதார வளர்ச்சியின் சாதனையாகும். இதன் மூலம் ஒரு நாடு எந்தவொரு ஏகாதிபத்தியத்தின் மூலதனத்தைச் சாராமலேயே, அந்நிய தொழில் நுட்பம் சாராமலேயே, சொந்த நாட்டு உழைப்பாளி மக்களின் உழைப்பை மட்டும் கொண்டு ஏகாதிபத்திய நாடுகளை காட்டிலும் அனைத்து துறைகளிலும் பயங்கரமான வளர்ச்சியை எட்டமுடியும் என்பதை உலகத்தின் முன் முதன்முதலாக சோவியத் ரஷ்யா நிரூபித்தது. இதனைத் தொடர்ந்து சோசலிச சீனமும் 1949 ஆம் ஆண்டிற்குப் பிறகு சுயேச்சையான வளர்ச்சியை நிரூபித்த மற்றொரு நாடாகும்.

# முதலாளித்துவம் நெருக்கடி நிலையை அடைந்துள்ளது!




பிரான்ஸ் போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு, நலனோன்பு (Welfarism) முறைக்குள் பிரவேசித்த பின்னர், ஓய்வூதிய சீரமைப்பு என்பது தேசிய ஒழுங்கமைப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக உள்ளது.

ஐரோப்பிய பொருளாதாரத்தின் பிரதான சக்திகளில் ஒன்றான பிரான்சில் ஓய்வூதிய சீரமைப்புத் திட்டம் என்பது கைத்தொழில் புரட்சிக்குப் பிந்தைய வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டதாக இருப்பதுடன், முழு ஐரோப்பிய யூனியனுடனும் போட்டியிடுவதற்கான ஒன்றாகவும் இருக்கின்றது. இன்றைய உலகமயமாக்கல் சூழலில், பிரான்ஸ் ஐரோப்பிய யூனியனுக்குள் பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்குவது மட்டுமின்றி, அமெரிக்கா, சீனா மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் போட்டியையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பிரான்சின் இன்றைய பொருளாதார பலம் என்பது, மேற்குலகின் 500 வருடங்களுக்கும் மேலான காலனித்துவ விரிவாக்கத்தின் அடிப்படையில் உள்ளதுடன், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரான இரண்டு தலைமுறைகளின் கடின உழைப்பினால் பெறப்பட்டதுமாகும்.

இன்றும் பிரான்ஸ் 14 முன்னாள் மேற்கு ஆபிரிக்க காலனிகளின் நாணயங்களைக் கட்டுப்படுத்துவதுடன், அந்த நாடுகள் தமது அந்நியச் செலாவணியில் 50 சதவீதத்தை கட்டாயமாக பிரான்ஸ் பொதுத் திறைசேரியில் வைப்பிலிடவும் வேண்டும். இதன் காரணமாகவே பிரான்ஸ் உலகில் இன்னமும் மிகவும் வலுவான நலனோன்பு முறைமையையும், ஓய்வூதிய முறையையும் கடைப்பிடிக்க முடிகிறது.

உலகமயமாக்கல் சூழல் காரணமாக பிரான்ஸ் மக்கள் தமது முன்னோர்கள் சேர்த்து வைத்த செல்வங்களை இழந்து வருகின்றனர். பிரான்ஸ் இன்னமும் பணபலம் உடையதாக இருப்பதுடன், உக்ரைனுக்கு கணிசமான இராணுவ உதவியையும் வழங்கி வருகிறது. இருந்தபோதிலும், தொடர்ந்து அதிகரித்து வரும் முதியோர் தொகை காரணமாக, பிரான்சின் ஓய்வூதியத்துறை பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றது. இந்த நிலைமையே ஓய்வூதிய சீர்திருத்தத்தை மேற்கொள்ளும்படி பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை நிர்ப்பந்தித்தது. நலனோன்பு அமைப்பின் முக்கிய பகுதியாக ஓய்வூதியம் இருக்கின்றது. அதன் காரணமாக பல நாடுகள் ஓய்வூதியத்தை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியாத நிலையில் இருக்கின்றன. எனவே, ஒரு நீதியான விநியோக முறையில் ஓய்வூதியத்துக்கான தொகை ஒரு பிரச்சினையாக இருக்கிறது.


பிரான்சில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் இந்தச் சுமையைத் தாங்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்களது வேலையின் தன்மை கணனிகள், களஞ்சிய பொறுப்பாளர்கள், பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்டவர்களுடையதை விட வேறுபட்டதாகும். அதனால் இந்த ஓய்வூதியச் சீரமைப்பு செல்வந்த இடைவெளியை மேலும் அதிகரிக்கும்.

ஐரோப்பாவைப் பொறுத்தவரையில் பிரான்சில் செல்வந்த இடைவெளி மற்றைய நாடுகளை விடக் குறைவானது. ஆனால் சமீப ஆண்டுகளில் இந்த இடைவெளி அதிகரித்துள்ளது. பரீஸ் பொருளாதார கல்வியகத்தின் உலக சமத்துவமின்மை ஆய்வுகூடத்தின் தகவலின்படி, 1980 களின் பின் பிரான்சில் இந்த அசமத்துவம் ஒவ்வொரு துறையிலும் அதிகரித்து உள்ளது.

உலகத் தரம் வாய்ந்த பொருளாதார சக்தியான பிரான்ஸ் எதிர்நோக்கும் சவால்கள் நிதி சம்பந்தமானது மட்டுமல்ல. இப்பொழுது நலனோன்பு முறையினால் பலன் பெற்று வரும் புதிய தலைமுறையினர், குறிப்பாக கீழ்மட்ட மற்றும் உற்பத்தித் துறையிலுள்ளோர், தமது முன்னோர்கள் போல எவ்வளவு தூரம் கடுமையாக வேலை செய்து குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியை உண்டு

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# இங்கிலாந்து நீதிமன்றத்தில் கியூபாவுக்கு வெற்றி



கடன் தொடர்பாக கியூபா மீது நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கொன்றில், கியூபாவின் தரப்பில் எந்தவிதத் தவறும் இல்லை என்று இலண்டன் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கியூபாவில் இருந்து இயங்கி வந்த அமெரிக்காவின் பி.என்.சி. (Banco Nacional de Cuba - BNC) வங்கி, ஐரோப்பிய வங்கிகளில் இருந்து இரண்டு கடன்களைப் பெற்றது. கிட்டத்தட்ட 7 கோடியே 80 இலட்சம் (78 மில்லியன்) அமெரிக்க டொலர் மதிப்புள்ள இந்தக் கடன்களை அந்த வங்கி திரும்பச் செலுத்தவில்லை. 1991ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த வங்கி, 2017 ஆம் ஆண்டு மூடப்பட்டது. அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணத்தைத் தனது தளமாகக் கொண்டு இந்த வங்கி இயங்கி வந்தது. இந்த வங்கி பெற்ற கடன்கள் மீளவராக் கடன்களாக மாறியது.

இந்நிலையில், இந்தக் கடன்களை வழங்கியது தாங்கள்தான் என்று சி.ஆர்.எப். (CRF) என்ற நிதி நிறுவனம் இலண்டன் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. பிரிட்டனின் கேமேன் தீவுகளில் இருந்து இந்த நிறுவனம் இயங்கி வருகிறது. இந்தக் கடன்களை மூன்றாவது தரப்புக்கு மாற்றப் போவதாக இந்த நிறுவனம் அறிவித்தது. அவ்வாறு மாற்றுவதற்கு கடன் வாங்கிய வங்கியும், கியூப அரசும் ஒப்புதல் தர வேண்டும் என்று கோரியது. ஆனால், கியூப அரசு ஒப்புதல் தர மறுத்துவிட்டது. வங்கியும், கியூப அரசும் ஒப்புதலைத் தர வேண்டும் என்று சி.ஆர்.எப். நிறுவனம் இலண்டன் உயர்நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தது. 1984 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இந்தக் கடன்களுக்கு கியூப அரசு பொறுப்பேற்க வேண்டியதில்லை என்று தீர்ப்பு கிடைத்துள்ளது. கடனை வழங்கும் முன்பாக, கியூப அரசாங்கத்திடம் ஒப்புதலை சி.ஆர்.எப். நிதி நிறுவனம் பெறவில்லை என்பதைத் தீர்ப்பு வழங்கியுள்ள உயர்நீதிமன்ற நீதிபதி சாரா கொக்கெரில் (Sara Cockerill) தெளிவுபடுத்தியிருக்கிறார்.

## கியூபா மீது தவறில்லை

கடன் வழங்கிய பி.என்.சி. வங்கியின் அதிகாரி ஒருவருக்கு இலஞ்சம் கொடுத்தே இந்தக் கடன்களுக்கான உரிமையை மாற்றித் தருவதற்கான ஒப்புதலைப் பெற்றிருக்கிறார்கள். அந்த அதிகாரி மீது ஏற்கனவே கியூப அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்தக் கடனுக்குத் தன்னால் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது என்று கியூப அரசு சொல்வதற்கு, இந்த மோசடி விவகாரம் நியாயமான காரணமாகவே அமைந்திருக்கிறது என்றும் சாரா கொக்கெரில் குறிப்பிட்டுள்ளார். மேலும் கூறிய அவர், “இந்த அதிகார எல்லைக்கு வெளியில் கியூபா சென்றுவிட்டது. இனிமேல் இந்த வழக்கு, பி.என்.சி. வங்கி மீது மட்டுமே தொடரும். தங்கள் மீதான சி.ஆர்.எப். நிறுவனத்தின் குற்றச்சாட்டுகளுக்கு அந்த வங்கி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தனது தரப்பு வாதங்களை வைக்கலாம்” என்று கூறியிருக்கிறார்.

## பழி சுமத்தும் திட்டம்

வாங்கிய கடன்களைப் பிறருக்கு மாற்றி விட்டதில் பெரும் மோசடி நடந்துள்ளது என்று கியூப அரசு தனது தரப்பு வாதத்தை வைக்கும்போது குறிப்பிட்டது. மேலும், முறை கேட்டில் ஈடுபட்டுள்ள வங்கி, கியூபாவையோ அல்லது கியூப அரசையோ பிரதிநிதித்துப்படுத்த முடியாது என்று உறுதியாகத் தெரிவித்தனர். கியூபா மீது குற்றம் சாட்டி, கடனை அந்நாட்டு மக்கள் மீது சுமத்தும் திட்டமாகவே இது இருந்தது. கடன் வழங்கிய இரண்டு ஐரோப்பிய வங்கிகளும் இந்த வழக்கில் பெரும் அக்கறை காட்டவில்லை. அதோடு, இதுபோன்ற கடன்கள் வழங்கப்பட்டு, அவற்றைத் திரும்பப் பெறுகிறோம் என்று சொல்லிக் கொண்டு இறையாண்மை கொண்ட நாடுகளில் இருந்து கொள்ளையடிக்கவே பயன்படுத்துகிறார்கள் என்று கூறியுள்ள கியூபத் தரப்பு, “எங்கள் நாட்டின் கடன்களை எப்போதும் நாங்கள் நிராகரித்த தில்லை. சட்டரீதியாகக் கடன் வழங்குபவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் உடை யவர்களாகவே இருக்கிறோம். வேண்டுமென்றே கடனை எங்கள் நாட்டின் மீது திணிப்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது” என்று தெரிவித்திருக்கிறது.


---

ஏகபோக மூலதனத்தின் நோக்கம் ஏதேனும் இலாபத்தை பெறுவதல்ல. மாறாக, உச்சபட்ச இலாபத்தை அடைவதே அதன் முதன்மையான நோக்கம். நவீன முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதியின் முக்கியமான அம்சங்கள் மற்றும் தேவைகளை கீழ்க்காணும் வகையில் வகைப்படுத்தலாம்:

– சுரண்டலின் மூலமாக அதிகப்படியான முதலாளித்துவ இலாபத்தை பெறுவது
– குறிப்பிட்ட நாட்டின் பெரும்பான்மை மக்களின் வாழ்வை அழித்து ஏழ்மைக்கு உள்ளாக்குவது
– பிற நாடுகளின் (குறிப்பாக பின்தங்கிய நாடுகளின்) மக்களை அடிமைப்படுத்தி கொள்ளையை நிறுவனமாக்குவது
– தேசிய பொருளாதாரத்தை போர் மற்றும் இராணுவமயமாக்குவதோடு, அவற்றை உச்சபட்ச இலாபத்தை பெறுவதற்கு பயன்படுத்துவது

**–ஸ்டாலின்**

# வைக்கம் 100: போராட்டக்களம் தரும் பாடங்கள்!



**வைக்கம் சத்தியாக்கிரக போராட்டத்தின் நூற்றாண்டு தொடக்க விழா 01.04.2023 அன்று கேரளாவில் ஆரம்பிக்கப்பட்டது. கேரளம் மாநிலம் முழுவதும் 603 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த கேரள அரசும், தமிழ்நாடு அரசும் திட்டமிட்டுள்ளன. தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்ட இந்தத் தொடக்க விழாவில், கேரள முதல்வர் பினராயி விஜயன் ஆற்றிய உரை:**

வைக்கம் சத்தியாக்கிரக போராட்டம், ஈடு இணையில்லாத, மிகப்பெரிய போராட்டம் ஆகும். அந்த போராட்டத்தின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை இன்று தொடங்குகிறோம். கேரளத்தில் மாறுமரக்கல் சமரம், அருவிபுரம் சிலை வைத்தல், வில் வண்டி யாத்திரை, கல்லுமாரு சமரம், குருவாயூர் சத்தியாகிரகம் என பல்வேறு மறுமலர்ச்சி போராட்டங்களுடைய வரிசையில் மிகவும் முக்கியமானது, வைக்கம் சத்தியாகிரகம் போராட்டம் ஆகும். இத்தனை போராட்டங்கள் நடந்திருந்தபோதும் வைக்கம் போராட்டம், தன்னளவில் ஈடு இணையற்ற ஒன்றாகும்.

மிகப் பெரிய மற்ற போராட்டங்களில் இருந்து இதனை மாறுபடுத்திக் காட்டுவது எது?. சமூக விடுதலை இயக்கமும், தேச விடுதலை இயக்கமும் அதில் ஒருமித்து இணைந்திருந்தது என்பதே அதற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க முக்கியத்துவத்தை உருவாக்குகிறது. மறுமலர்ச்சி நாயகர்களும், தேச விடுதலை இயக்கத் தலைவர்களும் தங்களுக்கே உரித்தான தன்மையுடன் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

### விடுதலை இயக்கமும், சமூக இயக்கமும்

அதுகாறும் நடைபெற்ற சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை சமூக விடுதலை இயக்கங்களே தலைமையேற்று நடத்தின. ஸ்ரீ நாராயண குருவும், சட்டம்பி சுவாமிகளும், அய்யன்காளி உள்ளிட்ட சமூக விடுதலைப் போராளிகளின் உயிர்ப்புடன் கூடிய வழிகாட்டுதல் இல்லாமல் போயிருந்தால் வைக்கம் சத்தியாகிரகத்தை போன்றதொரு முற்போக்கான இயக்கம் நடந்திருக்குமா என்பதும் சந்தேகமே.

ஸ்ரீ நாராயண குரு, ஒரு ரிக்ஷா வண்டியில் வைக்கம் கோயிலுக்கு அருகில் சென்றபோது, ஒரு சாதி இந்து (சவர்ண) பெண் அவரை தடுத்தார். அதுதான் வைக்கம் போராட்டத்திற்கு வழிவகுத்தது என்று அந்தக் காலத்தில் வாழ்ந்த மூலூர் எஸ். பத்மநாப பணிக்கர் ஒரு கவிதையில் விவரித்துள்ளார். தேச விடுதலை போராட்ட இயக்கங்களுடன் வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தை இணைத்ததில் டி.கே.மாதவன் வகித்த பாத்திரம் மிகவும் முக்கியமானதாகும். மனிதத் தன்மையற்ற முறையில், குடிமக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், அதற்கு எதிரான எழுச்சியாகவே வைக்கம் போராட்டம் உருவானது. வர்ணாசிரமத்தின் சாதீய அடக்குமுறைகளுக்கு எதிரான போர் முழக்கமாகவும் வைக்கம் போராட்டம் திகழ்ந்தது. குருவாயூர் சத்தியாகிரகத்தின் வழியாக அந்த போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. ஆலய நுழைவுக்கான விளம்பரங்கள் வெளியிடப்படும் சூழல் உருவானதற்கும் வைக்கம் போராட்டத்தை தொடர்ந்து எழுந்த போராட்ட அலையே காரணமாகும்.

### கேரளமும், தமிழ்நாடும்

தமிழ்நாட்டின் முதலமைச்சர் குறிப்பிட்டதைப் போல, வைக்கம் போராட்டமானது கேரளத்திற்கு மட்டுமல்லாது தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளது இதில் கவனிக்க வேண்டிய விசயம். பிராமணர் அல்லாதோரின் இயக்கமாக திராவிட இயக்கத்தை உருவாக்கிய பெரியார், தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்து வைக்கம் போராட்டத்தில் சிறைசென்ற விபரமும் நாம் அறிந்ததே. இந்த மாபெரும் வரலாறு, இரண்டு மாநிலங்களாலும் மறக்க முடியாதது. பல்வேறு சமூகப் போராளிகளும் வைக்கம் போராட்டத்திற்கு ஆதரவாக கேரளாவிற்கு வந்து சேர்ந்தனர். சி.ராஜகோபாலாச்சாரி, ஸ்ரீனிவாச அய்யங்கார், ஐயா முத்துக் கவுண்டர் என அந்த காலத்தில் தமிழ்நாட்டில் செயல்பட்ட ஏராளமானவர்கள் வைக்கம் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தனர்.

தமிழக முதலமைச்சரின் இன்றைய வருகையினை இந்த வரலாற்று பின்புலத்தோடு பார்க்க வேண்டும். அப்போதுதான் அதன் தனிச் சிறப்பினை புரிந்துகொள்ள முடியும். ஒரே போராட்டப் பாரம்பரியத்தைக் கொண்ட, பெருமையினை பகிர்ந்துகொள்ளும் சகோதர மாநிலங்களாக தமிழ்நாடும் கேரளமும் உள்ளன. தோள்சீலை போராட்டத்தின் 200ஆவது ஆண்டு நிறைவு பொதுக்கூட்டத்தில் நாங்கள் இருவரும் பங்கேற்றபோது வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு கொண்டாட்டங்களைப் பற்றியும் பேசினோம்.

வைக்கம் போராட்டம் ஒரு வலிமையான மாற்றத்தை முன்வைத்தது. போராட்டத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்பதுதான் அந்த மாற்றம். அவ்வாறே தமிழ்நாடு, கேரள மாநில மக்களின் மனங்கள் இணைந்தன. வருங்காலத்திலும் அந்த ஒற்றுமை

தொடர்ந்திடும். சகோதரத்துவத்துடன் அது வலுப்படும். இந்தியாவிற்கே ஒரு மாற்றினை முன்மாதிரியாக உயர்த்திக் காட்டும் என்பதை மகாத்மா காந்தி, ஸ்ரீ நாராயண குரு மற்றும் பெரியார் ஆகியோரின் நினைவுகளைத் தாங்கி நிற்கக் கூடிய இந்த வைக்கம் மண்ணில் நின்று கூறுவதில் பெருமைப்படுகிறேன்.

**ஒன்றுபட்ட போராட்டம்**

மற்றொரு மாற்றினையும் வைக்கம் போராட்டம் நமக்கு அளித்துள்ளது. பாதிக்கப்பட்ட சமூகங்கள் தங்களுடைய உரிமைகளை வெல்வதற்கு தனியாக நின்று போராட வேண்டியதில்லை என்பதே அந்த செய்தியாகும். கே. கேளப்பன், கே.பி. கேசவமேனன், மன்னத்துப் பத்மநாபன், குரூர் நீலகண்டன் நம்பூதிரிபாட், டி.கே. மாதவன், டி.ஆர். கிருஷ்ணசாமி ஐயர், கண்ணந்தோடத்து வேலாயுதமேனன் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பின்புலங்களைச் சேர்ந்தவர்கள் வைக்கத்தில் நடந்த போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார்கள் என்பதை நாம் நினைவில் நிறுத்த வேண்டும்.

மன்னத்து பத்மநாபன் தலைமையில் வைக்கம் முதல் திருவனந்தபுரம் வரை ஒரு நடைபயணம் நடந்தது. அப்போது பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஒருவரை தாக்க முயன்றவர்களை மன்னத்து பத்மநாபன் அவர்களே தடுத்து காப்பாற்றினார் என்பதும், அனைவரும் இணைந்து போராட்டக்களம் கண்டதற்கு உதாரணம். அவர்ணர்களுக்கு (சாதிக் கட்டமைப்புக்கு வெளியே நிறுத்தப்பட்டவர்களுக்கு) பொதுச் சாலைகளை பயன்படுத்த உரிமை வழங்கவேண்டும் என்பதே அந்த நடை பயணத்தின் கோரிக்கையாகும்.

காக்கிநாடாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் தீண்டாமைக்கு எதிராகவும், ஆலைய நுழைவை ஆதரித்தும் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு மகாத்மா காந்தி வழங்கிய பாராட்டுக்களும், வைக்கத்திற்கு வந்த ஸ்ரீ நாராயண குருவின் பயணமும், தன்னுடைய மடத்தை போராட்டத்திற்கு வழங்கிய நடவடிக்கையும், தீண்டாமைக்கு எதிரான இயக்கத்தின் தொடக்கமும் வைக்கம் போராட்டத்தின் பின்னணியில் நாம் நினைவில் நிறுத்திட வேண்டிய முக்கியமான நிகழ்வுகள் ஆகும்.

போராட்டம் பற்றிய பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வந்த காந்தியாரும்



**பினராயி விஜயன்**
**கேரள முதல்வர்**

கூட வைக்கம் மகாதேவர் ஆலையத்தை நிர்வகித்த இண்டம்துருத்தி மனைக்கு உள்ளே அனுமதிக்கப்படாத செயலும் நடந்தேறியது. ஆலயத்தைச் சுற்றிலும் இருந்த பொது வழியை அனைவரும் பயன்படுத்த உரிமை வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. காந்தியாரை அனுமதிக்க மறுத்து அவமதித்த அந்த மனை தற்போது ‘கள் இறக்கும் தொழிலாளர்களுடைய சங்கத்தின்’ அலுவலகமாக செயல்படுகிறது. வரலாறானது முன்னோக்கியே நகரும் என்பதற்கான முன்னுதாரணம் இது.

சத்தியாகிரக போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீது சொல்லொண்ணா வகையில் தாக்குதல்கள் நடந்தன. ‘ராமன் இளையது’ என்ற பிராமணர் ஒருவர் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக, அவருடைய கண்ணில் பிராமண சமூகத்தினர் சுண்ணாம்பை பூசினார்கள். அவர் தன்னுடைய கண் பார்வையை இழந்து இறுதி நாள் வரை துன்பப்பட்டார். இதைப் போன்ற பல்வேறு தாக்குதல்களை எதிர்கொண்டு, இவ்வாறான போராட்டங்களின் வெற்றிகளின் வழியாகத்தான் கேரள மாநிலம் இன்று இந்தியாவிற்கே முன் மாதிரியாக வளர்ந்துள்ளது.

**அரசியலும் சமூக விடுதலையும்**

இன்னபிற சமூக விடுதலைப் போராட்டங்களில் இந்த வைக்கப் போராட்டம் தனித்து தெரிவதற்கான மற்றொரு காரணம் அது தனியொரு நபரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டமாக இல்லை என்பதாகும். பல்வேறு சமூகப் போராட்டங்களை பெருமைக்குரிய தலைவர்கள் பலரும் வழிநடத்தியுள்ளார்கள். ராஜா ராம்மோகன் ராய் முதல் மகாத்மா பூலே வரையிலும் தேசிய அளவில் இயக்கங்களைத் தலைமையேற்று நடத்தினார்கள். ஸ்ரீ நாராயண குரு, அய்யங்காளி போன்ற தலைவர்கள் கேரளத்தில் போராட்டங்களுக்கு தலைமையேற்றார்கள். ஆனால் வைக்கம் போராட்டத்தில் தனி நபர் தலைமை இல்லை. அரசியல் கட்சிகளின் தலைமையுடன் சமூக விடுதலை இயக்கங்களும் இணைந்து நின்றன.

இன்று சிலர், சமூக விடுதலை இயக்கத்தில் அரசியல் கட்சிகளுக்கு எந்த பங்கு பாத்திரமும் இல்லை என்று வாதம் செய்கிறார்கள். ஆனால் அது உண்மை இல்லை என்பதற்கு வைக்கம் போராட்டக்களம் முன்னுதாரணமாக திகழ்கிறது. அன்றைக்கு நிலவிவந்த சமூக ஒடுக்குமுறைகளினால் துயருற்ற மக்கள் மட்டும் நடத்திய போராட்டமாக வைக்கம் போராட்டக்களம் அமைந்திருக்கவில்லை. எல்லா சாதிகளிலும் இருந்த முற்போக்குச் சிந்தனையுடையவர்கள் இந்த களத்தில் போராடினார்கள். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களுடன் சீக்கியர்களும் இந்த போராட்டத்தில் பங்கு வகித்தனர்.

கே. அப்துல் ரகுமான் குட்டி, ஃபரிது சாகிம், எம்.கே. அப்துல் ரஹீம் ஆகியோர் இஸ்லாமிய சமூகத்தின் பிரதிநிதிகளாக வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். பாரிஸ்ட்டர் ஜோர்ஜ் ஜோசப் போன்றோரின் பங்கையும் நாம் நினைவுகூர வேண்டும். வைக்கத்தில் உணவு சமைத்துக் கொடுப்பதற்காக சீக்கிய சகோதர்கள் பத்துப் பேர் வந்து சேர்ந்ததும் வரலாற்றில் பதிவாகியுள்ளது. ஒரு மதச்சார்பற்ற போராட்டமாக வைக்கம் சத்தியாகிரகம் அமைந்திருந்தது என்பதை நாம் உறுதியாக கூற முடியும்.

**போராட்டமே வெற்றி தரும்**

1865 ஆம் ஆண்டிலேயே அனைத்துப் பிரிவு மக்களும் பொதுப் பாதையை பயன்படுத்துவதற்கான உத்தரவினை திருவிதாங்கூர் சமஸ்தானம் வெளியிட்டிருந்தது. ஆனால் அது நடைமுறைக்கு வர 60 வருடங்கள் கழித்து மக்கள், வைக்கம் சத்தியாகிரகத்தை நடத்தும் தேவை எழுந்தது. உத்தரவுகளை பிறப்பிப்பதால் மட்டும் சமூக மாற்றங்களை உருவாக்கிட முடியாது. மக்கள் பங்கேற்புடன் கூடிய இயக்கங்களே அதற்கு வழிவகுக்கும் என்பதை வைக்கம் போராட்டம் நமக்கு உணர்த்துகிறது.

இந்தப் போராட்டம் நாடு முழுவதும் நடைபெற்ற ஆலய நுழைவுப்

போராட்டங்களுக்கு உத்வேகம் அளிப்பதாக அமைந்தது. இவ்வகையில் வைக்கம் போராட்டம் நாட்டுகே ஒரு வழிகாட்டியாக இருந்ததை மறுக்க முடியாது. 20 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் உருவான சமூக போராட்டங்களை முன்னெடுத்த இயக்கங்கள்தான் தற்போது கேரளாவிலும், தமிழ் நாட்டிலும் ஆட்சியில் உள்ளன என்பது தற்செயல் அல்ல. பெரியாரும் அண்ணாவும் உருவாக்கிய திராவிட இயக்கத்தை காலச் சூழலுக்கு ஏற்ப அரசியல் படுத்தி ஸ்டாலின் தலைமையிலான அரசாங்கம் தமிழ் நாட்டில் செயல்படுகிறது. சமூக விடுதலை இயக்கங்களில் இருந்து ஊக்கம் பெற்ற ஒரு புதிய சமூகத்தை உருவாக்கிட இடது ஜனநாயக அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த இரண்டு இயக்கங்களும் வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிகழ்ச்சியில் இணைவது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

மொழி, பண்பாடு, வரலாறு ஆகியவைகளை பாதுகாத்திட உருவாகும் ஒன்றுமையானது, மக்களையும், நாட்டையும் பாதுகாக்கும் போராட்டக் களத்திலும் பிரதிபலிக்கும். இந்த ஒற்றுமை மென்மேலும் வலுப்பட வேண்டும். சமூக விடுதலை மற்றும் தேச விடுதலைப் போராட்டங்களை ஒன்றிணைத்து, நாட்டின் ஒட்டு மொத்த நலனை, கட்சி வேறுபாடுகளைக் கடந்து கவனத்தில் கொள்ள வேண்டும்.

**ஒன்றுபட்டு நிற்போம்**

சிறு, சிறு மாற்றுக் கருத்துக்களால் பிளவுபடாமல், ஒரு பெரிய ஆபத்தை எதிர்த்து வீழ்த்திடும் ஒற்றுமையை கூடுதலாக்குவதே நம்முடைய தேவை என்பதை வைக்கம் போராட்டம் நமக்கு கற்பிக்கிறது. அநீதிகளுக்கு எதிராகவும், ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் போராடுபவர்கள் மட்டுமே நீடித்து நிலைத்திட முடியும். நம்முடைய விடுதலைப் போராட்டக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான முழக்கங்களுக்கும், நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்திற்கும் எதிரான தாக்குதல்கள் நடந்துவரும் சமயத்தில் நாம் இங்கே கூடியிருக்கிறோம். அந்தச் சக்திகளைத் தோற்கடிக்கும் ஒற்றுமையை உருவாக்கிடப் போராட வேண்டும்.

மதச்சார்பின்மை, அரசியல் அமைப்பின் முக்கிய அம்சம் ஆகும். அதனைப் பின்னுக்குத் தள்ளி, இந்தியாவை மத நாடாக மாற்றும் முயற்சிகள் கெட்டிப்பட்டு வருகின்றன. அரசியலமைப்புச் சட்டத்தினை நீர்த்துப் போகச் செய்து அதற்கு பதிலாக மனுநீதியை நிறுவிடும் முயற்சிகள் நடக்கின்றன. முந்தைய காலத்தில் நிலவிவந்த தீண்டாமை, ஜாதியப் பிரிவுகள், ஏற்றத்தாழ்வுகளை மீண்டும் நிறுவ எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராக அனைவரும் ஒன்றுபட்டு தடுத்திட வேண்டும். வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டின் தொடக்க விழாவோடும், இதனைத் தொடர்ந்து 603 நாட்கள் நடக்கவுள்ள நிகழ்ச்சிகளோடும் வைக்கம் போராட்ட நினைவுகளை முடித்துக்கொள்ளக் கூடாது. வைக்கம் போராட்டத்தின் நினைவாக ஒரு நினைவு மண்டபத்தை கேரள அரசாங்கம் ஏற்படுத்தும். பழ.அதியமான் எழுதிய ‘வைக்கம் போராட்டம்’ பற்றிய புத்தகத்தின் மலையாள மொழியாக்கத்தை டி.சி.புக்ஸ் நிறுவனம் வெளியிடுகிறது. இதுவரை வெளிவராத பல்வேறு வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிய அந்த புத்தகத்தை தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் இணைந்து வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று நாம் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்வதற்கு வைக்கம் போராட்டத்தில் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் உத்வேகமூட்டும் என வாழ்த்தி, நாங்கள் இந்த போராட்ட நூற்றாண்டினை தொடங்கி வைக்கிறோம்.

**–தமிழில்: நீலாம்பரன்**

(நூற்றாண்டு காணும் வைக்கம் போராட்டம் *1924*ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கியது. அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்தின் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில் சிவன் கோயிலைச் சுற்றிலுமுள்ள நான்கு தெருக்களில் ஈழவர் உட்பட தாழ்த்தப்பட்டோர் நடக்கக் கூடாதெனத் தடை இருந்தது. இத்தகைய தடை தொடர்பான செய்தி கேரளம் முழுவதும் பரவியது. இத்தடையை நீக்கி அவ்வீதியில் நடக்க உரிமை வேண்டி நிகழ்ந்த சத்தியாகிரகமே வைக்கம் போராட்டம். ஈழவர் தலைவர் டி.கே.மாதவனின் பல்லாண்டுகால முன்முயற்சியில் கிளர்ந்த இந்த வைக்கம் போராட்டத்தை, உற்சவ மூர்த்தியாகவும் மூளையாகவும் முறையே கேரள காங்கிரஸ் தலைவர்கள் கே.பி.கேசவ மேனனும் ஜோர்ஜ் ஜோசப்பும் தொடங்கி வைத்தனர். தமிழ்நாட்டுப் பெரியார், கேளப்பன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி போன்றோர் நடத்துநராகப் போராட்டத்தைச் செயல்படுத்த, ஆலோசகரான காந்தி நிறைவில் வந்து முடித்து வைத்தார் எனச் சுருக்கமாக வைக்கம் போராட்டச் சித்திரத்தை வரையலாம். இடையில் மன்னத்து பத்மநாபன் போன்றோர் பெரும் துணையாக அமைந்தனர்.)

---

**8ம் பக்கத்தொடர்ச்சி...**

பண்ணுவார்கள் என்பதே கேள்வியாக உள்ளது. முன்னாள் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சாக்கோஸியின் பிரசித்தி பெற்ற வார்த்தைகளான “கூடுதலாக வேலை செய்து கூடுதலாகச் சம்பாதியுங்கள்” என்பது சில வருடங்களுக்கு முன்னர் சரியானது எனக் கருதப்பட்டாலும், தற்பொழுது பெரும்பான்மையான பிரான்ஸ் மக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் அதை நிராகரிக்கின்றனர்.

எனவே, ஓய்வூதிய சீர்திருத்தம் என்பது ஒழுங்கு முறைக்குட்பட்டது மட்டுமின்றி, உணர்வு சம்பந்தமானதாகவும் இருக்கின்றது. பிரான்ஸ் தனது உறுதியான போட்டித்தன்மையை நிலைநாட்டுவதென்பது, படிமுறையான மற்றும் உணர்வுபூர்வமான என்ற இரண்டினதும் இரட்டைச் சவால்களை எதிர்நோக்குகின்றது.

வரலாற்றை எடுத்து நோக்கினால் ஐரோப்பிய முதலாளித்துவம், கண்டு பிடித்த வல்லமைத்தன்மையும் நியாயத்தன்மையுமே சீர்திருத்தங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது. ஐரோப்பிய மக்கள் அமெரிக்காவிலிருந்து வேறுபட்ட, நலனோன்பு மற்றும் நீதியான விநியோக முறையையே தேர்ந்தெடுத்து வந்துள்ளார்கள். இருந்தபோதிலும், நலனோன்பு முதலாளித்துவத்தின் கீழ் முதலாளித்துவத்தின் இயற்கையான தன்மை மாறாது. மாறாக, செல்வந்த இடைவெளியை அதிகரிக்கவே செய்யும்.

பிரெஞ்சு மக்கள் இப்போதைக்கு இதைத் தீர்க்க முடியாது. அமெரிக்க முதலாளித்துவமும் இதே நெருக்கடி நிலையிலேயே உள்ளது. இவைகள் விரைவாக மாறக்கூடியவை அல்ல. எதிர்காலம் நிச்சயமற்றதாகவே உள்ளது.

(சீனாவிலிருந்து வெளியாகும் Global Times பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையின் சாராம்சமே இது)

# பூமியைக் காப்போம்

நாங்கள் வாழும் இந்த பூமி சூரிய மண்டலத்தின் ஐந்தாவது பெரிய கோள். வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் இவை பூமியைவிடப் பெரியவை. சூரிய குடும்பத்தில் மொத்தமுள்ள எட்டு கோள்களில், வேறு எந்த கோளுக்கும் இல்லாத உயிர்கள் வாழக் கூடிய தனிச் சிறப்பு பூமிக்கு மட்டுமே உண்டு.

சூரிய குடும்பத்திலுள்ள மற்ற கோள்களைப் போலவே, பூமியும் சூரியனைச் சுற்றி வருகிறது. பூமியின் விட்டம் 12,742 கி.மீ. அதன் சுற்றளவு 40,075 கி.மீ. இந்த பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்ள, 23 மணி நேரம் 56 நிமிடம் 4.09 வினாடி எடுத்துக் கொள்கிறது. பூமி ஒரு மணி நேரத்திற்கு கிட்டத்தட்ட 1,000 மைல் (சுமார் 1674 கி.மீ.) வேகத்தில் சுழல்கின்றது.

ஒரு வினாடிக்கு 30 கி.மீ. தொலைவு என பூமி ஒரு முறை சுற்றுப் பாதையை முடிக்க 365 நாட்கள் (ஓர் ஆண்டு) ஆகிறது. இது ஒரே திசையில் அதாவது தன்சுழற்சியில் மேற்கிலிருந்து கிழக்காக சுற்றுகிறது. பூமி கிரகம் சுழலும் போது, சூரியனை எதிர்கொள்ளும் புறம் பகலைப் பெறுகிறது, மற்றொரு புறம் இருளில் உள்ளது.

சுற்றுச்சூழல், நீர்நிலைகள் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு ஆகியவை குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, பூமியையும், அதன் மீது வாழும் உயிரினங்களையும் காக்கும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி 'உலக பூமி தினம்' கொண்டாடப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் 'கைலோர்ட் நெல்சன்' (Gaylord Nelson) என்பவரின் தீவிர முயற்சியால் 1970 ஆம் ஆண்டு உலக பூமி நாள் 'ஏர்த் டே நெட்வொர்க்' (Earth Day Network) எனும் அமைப்பால் தொடங்கப்பட்டது. இதன் மூலம் உலகம் முழுக்க உள்ள சுற்றுசூழல் ஆர்வலர்களை ஒன்று திரட்டி, பூமித் தாயின் மீது தொடுக்கப்பட்டு வரும் தாக்குதல்களை தடுத்து நிறுத்தவும், பூமியின் தற்போதைய நிலை குறித்த விழிப்புணர்வு பிரசாரங்களையும், அது தொடர்பான கருத்து பரிமாற்றங்களையும் உலக மக்களிடையே இந்நாளில் ஏற்படுத்தி வருகிறது. இந்த அமைப்பு, இதுவரை 193 நாடுகளை தன்னுடன் இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறது.




இந்த ஆண்டு உலக பூமி தினத்திற்கான கருப்பொருள் 'எங்கள் கிரகத்தில் முதலீடு செய்யுங்கள்' என்பதாகும். மனித குலம் தோன்றுவதற்கு முன்பே பல்வேறு உயிரினங்களை தன் மடியில் தாங்கி கொண்டது தான் எழில் நிறைந்த இந்த பூமி. உலகிலுள்ள 800 கோடி மனிதர்களுக்கும், எண்ணிலடங்கா உயிரினங்களுக்கும், உணவு, உறைவிடத்தை அளித்து பேணிக் காத்து வருவதும் நாங்கள் வாழும் இந்த பூமி தான்.

***இராதாகிருஷ்ணன்***

'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை' என்கிறது குறள். தன்னை வெட்டி சிதைப்போரையும் தாங்குகின்ற பேராற்றல் பூமித் தாய்க்கு மட்டுமே உண்டு. நம்மை சொற்களால் அவமதிப்போரையும், பொறுத்து மன்னிக்க வேண்டும் என்ற சிறந்த பண்பை நாம் பூமித் தாயிடமிருந்து தான் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

நாங்கள் வாழும் பூமி என்னும் கோளில் பல்லாயிர கோடிக்கணக்கான மக்கள், எத்தனையோ புல், பூண்டு, தாவரங்கள், மரங்கள், பறவைகள், விலங்கினங்கள், புழு, பூச்சிகள் மற்றும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் வாழ்கின்றன. அத்துடன், எண்ணிலடங்கா மலைகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள், மனிதர்கள் உருவாக்கிய வானளாவிய கட்டடங்கள், தொழிற்சாலைகள், அணைகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு தன்னை அண்டி வந்த அனைத்து உயிரினங்களையும் வாழ்வித்து வருகிறது பூமி. இத்தனையும் தாங்கிக் கொண்டு அமைதியாக நம்மைக் காக்கும் பூமி, எமக்குக் கிடைத்த வரம்.

ஒருபுறம் மக்கள்தொகை பெருகப் பெருக, மறுபுறம் பூமியின் வளங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. எம்மைச் சுற்றியிருக்கும் இந்த பூமி மனிதர்கள் மட்டுமே வாழ்ந்து வருவதற்கானது அல்ல. பல்வேறு வகையான புள்ளினங்கள், புழுக்கள், பூச்சிகள், தாவரங்கள், விலங்குகள், இந்தப் பூமியை நம்மோடு பகிர்ந்து கொண்டு, நம்மோடு வாழ்ந்து வருகின்றன. அவற்றிற்கான வாழ்விடங்களை மனிதர்களின் பேராசையாலும், சுற்றுச்சூழல் பாதிப்பினாலும் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டு வருகின்றனர்.

வரும் 2050 ஆம் ஆண்டிற்குள் மனிதனின் பேராசையினால் பூமியை அண்டி வாழும் ஐம்பது சதவீத உயிரினங்கள் பூமியை விட்டு விலகி விடும் என்ற அதிர்ச்சி செய்தியை புவியிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இது பூமித் தாய்க்கு நாங்கள் செய்யும் மாபெரும் துரோகமாகும்.

இன்று நாங்கள் அனுபவித்து வரும் புவி வெப்பமடைதல், தண்ணீர் பற்றாகுறை, மழையின்மை, பருவ மழை தவறுதல்

முதலிய அனைத்திற்கும் காரணம் நாம் பூமித் தாயின் மீது தொடுத்துவரும் தாக்குதல்தான் என்றால் அது மிகையல்ல.

எம் வசதிக்காக பூமிக்கு வளம் சேர்க்கும் மரங்களை அழித்து வருகிறோம். நாங்கள் அன்றாடம் பயன்படும் நெகிழிப் பொருள்கள் மூலம், நீரை நிலத்திற்குள் செல்ல விடாமல் தடுக்கிறோம். பூமித் தாயின் இரத்தமான நீரை ஒவ்வொரு நாளும் மாசுபடுத்தி வருகிறோம். இதனால், நாங்கள் வாழும் பூமி பெருமளவில் பாதிப்படைந்து, தான் நோயாளியாவதுடன் மட்டுமல்லாமல், தன் மீது வாழும் எண்ணற்ற உயிரினங்களையும் நோயாளியாக்கி வருகிறது.

இந்த பிரபஞ்சத்தில் அனைவருக்குமான ஒரே வீடு, நாங்கள் வாழும் இப்பூமி தான் என்பதை நாங்கள் நினைவில் கொள்ள வேண்டும். பூமியில் பசுமை நிறைந்த நாட்டில் வளத்திற்கு பஞ்சமிருக்காது. பூமித் தாய் வளம் இழந்து, வறட்சியானால் நாட்டில் பஞ்சம் ஏற்படும்.

*எம்மை சுமந்து காக்கும் பூமியை, நாங்கள் நல்ல முறையில் காக்க வேண்டும். அது மனித குலத்தின் கடமை. நாங்கள் வாழும் எம் பூமியை இப்போது நாங்கள் சேதப்படுத்தினால், வருங்கால சந்ததியினர் வாழ மற்ற கோள்களைத் தான் நாட வேண்டும், எனவே, இந்த பூமி தினத்தில் பூமியை செம்மைப்படுத்தி, வளப்படுத்தி காப்போம், அனைத்து உயிரினங்களையும் வாழ வைப்போம் என உறுதி கொள்வோம்.*

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

அவர் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டாலும் சிறைச்சாலையை கூட ஒரு போராட்டக் களமாக மாற்றியவர். சிறையில் மற்ற கைதிகளுக்கு இருக்கும் நெருக்கடியை கண்டு அவர்களுக்காகவும் போராடினார்.

அவர் சிறையில் இருந்த பொழுது 151 புத்தகங்களை வாசித்துள்ளார். நானூறு பக்கங்களுக்கு மேலாக குறிப்புகளை எழுதியுள்ளார். அதன் அடிப்படையில் அவர் பல புத்தகங்களையும் எழுதியுள்ளார். கனவுலகத்திற்கு ஓர் அறிமுகம், நான் ஏன் நாத்திகன் ஆனேன், இந்தியாவில் புரட்சி இயக்கத்தின் வரலாறு, சோசலிச கோட்பாடு, சுயமரியாதை, மரண வாசலில் உள்ளிட்ட பல நூல்களை எழுதி இருந்தாலும், இன்று நமக்கு கனவுலகத்திற்கு ஓர் அறிமுகம் நான் ஏன் நாத்திகன் ஆனேன் என்ற இரண்டு புத்தகங்கள் தான் நம் கரங்களில் தவழ்கிறது. இதில் why am I atheist என்று ஆங்கிலத்தில் எழுதிய நூலை தோழர் ஜீவானந்தம் அவர்கள் தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ளார். அதை நூலாக வெளியிட்டவர் பெரியார்.


பெரிய அளவிற்கு பள்ளிக்கூடம் செல்லாதவர் என்றாலும் அவர் பஞ்சாபி உருது இந்தி ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவராக இருந்தார். புத்தகம் வாசிப்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார்.

பகத்சிங் இடம் அன்பு கொண்ட சிறை கண்காணிப்பாளர் சரத் சிங் தன்னால் முடிந்த உதவிகளை செய்து வந்தார். அவரின் உதவியாள் மூலம்தான் லாகூரின் துவாரகா தாஸ் நூலகத்தில் இருந்து பகத்சிங்கத்திற்காக புத்தகங்கள் சிறைச்சாலைக்குள் வந்தன. புத்தகப் பிரியரான பகத்சிங் தன்னுடைய பள்ளி தோழர் ஜெயதேவ் கப்ருக்கு எழுதிய கடிதத்தில் கார்ல் லிப்னேக்கின் மிலிட்டரிஸம், லெனின் இடதுசாரி கம்யூனிசம், அப்ஸன் சின்க்லேயரின் தி ஸ்பை ஆகிய புத்தகங்களை குல்வீரிடம் கொடுத்து அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

## பாட்டாளிகளினுடைய உழைக்கும் சக்தியின் மதிப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுவதைப் பற்றி மார்க்ஸ்

ஒவ்வொரு பொருளின் மதிப்பையும் போலவே, உழைப்புச் சக்தியின் மதிப்பும் இந்தத் தனிவகைப் பண்டத்தின் உற்பத்திக்கும், அதேபோல அதனது மறுவுற்பத்திக்கும் (reproduction) – அவசியமான உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அது மதிப்பைப் பெற்றுள்ளதென்ற அளவில், அதில் சேர்ந்துள்ள சராசரி சமுதாய உழைப்பின் திட்டமான அளவையன்றி வேறு எதையும் குறிப்பதில்லை.

உயிருள்ள தனியாளின் ஆற்றல் அல்லது சக்தியே உழைப்புச் சக்தி என்று அழைக்கப்படுகின்றது. ஆதலால் அவர் இருந்தாலன்றி அதன் உற்பத்தி சாத்தியமன்று. தனியாள் இருக்க, உழைப்புச் சக்தியின் உற்பத்தி அவர் தன்னையே மறுவுற்பத்தி செய்து கொள்வதில், அதாவது அவரது பராமரிப்பில் அடங்கியுள்ளது. அவரது பராமரிப்புக்கு குறிப்பிட்ட அளவிலான வாழ்வுச் சாதனங்கள் அவருக்குத் தேவைப்படுகின்றன. எனவே உழைப்புச்



சக்தியின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் என்பது அந்த வாழ்வுச் சாதனங்களின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரமாகி விடுகிறது.

வேறு விதமாகச் சொன்னால், உழைப்புச் சக்தியின் மதிப்பு என்பது உழைப்பாளியின் பராமரிப்புக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் மதிப்பே. ஆயினும் உழைப்புச் சக்தி எதார்த்தமாவது, அதன் பிரயோகத்தின் வாயிலாகவே. அது தன்னைச் செயல்படுத்திக் கொள்வது வேலை செய்வதன் மூலமே. ஆனால், இவ்வழியில் மனிதத்தசை, நரம்பு, மூளை முதலானவற்றில் ஒரு குறிப்பிட்ட அளவு செலவழிகிறது. செலவழிந்த இவற்றை மீட்டமைக்க வேண்டும். இவ்வகையில் செலவு கூடினால் வருமானமும் கூட வேண்டும்.

உழைப்புச் சக்தியின் உடைமையாளர் இன்று வேலை செய்கிறார் என்றால், ஆரோக்கியம், வலிமை ஆகியவை தொடர்பான அதே நிலைமைகளில் அதே நிகழ்முறையை நாளை மீண்டும் நிகழ்த்த அவருக்கு சக்தியிருக்க வேண்டும். எனவே, அவரது வாழ்வுச் சாதனங்கள் தொடர்ந்து அவர் உழைப்பாளிக்குரிய இயல்பான நிலையில் இருப்பதற்குப் போதுமானவையாக இருக்க வேண்டும்.

உணவு, உடை, எரிபொருள், உறைவிடம் போன்ற அவரது

**தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

தலைமைதாங்கிய லெனினுக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான லியோன் ட்ரொட்ஸ்க்கிக்கும் இடையில் ஆரம்பம் முதல் ஏற்பட்டு வந்த முரண்பாடு ஸ்டாலின் காலத்திலும் தொடர்ந்ததுடன், அது சோவியத் புரட்சிக்கு இடையூறு விளைவிப்பதாகவும் இருந்தது.

இந்தக் கட்டத்தில்தான் இலங்கையில் சமசமாஜக் கட்சியின் தலைமை ஒரு பாரதூரமான தவறை இழைத்தது. அது சோவியத் கட்சிக்குள் நிகழ்ந்த தத்துவார்த்த – அரசியல் முரண்பாட்டில், சோவியத் புரட்சிக்கு விரோதமான நிலைப்பாட்டில் இருந்த ட்ரொட்ஸ்க்கியை ஆதரிப்பது என்ற நிலையை எடுத்ததுடன், இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் யூனியன் உலகப் பொது எதிரியான ஹிட்லரின் ஜேர்மனியைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்காவுடனும் பிரித்தானியாவுடனும் யுத்ததந்திரக் கூட்டணி அமைத்ததையும் எதிர்த்தது.

சமசமாஜக் கட்சித் தலைமையின் இந்தத் தவறான முடிவால், அக்கட்சியில் இருந்த உண்மையான கம்யூனிஸ்டுகள் வேறு வழியின்றி அந்தக் கட்சியை விட்டு வெளியேறி, *1943* இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தனர். இடதுசாரிகள் மத்தியில் அநாவசியமாக ஏற்பட்ட இந்தப் பிளவு, மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி, இலங்கையில் முதலாளித்துவ சக்திகளைப் பின்னுக்குத் தள்ளி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இடதுசாரிகளுக்கு இருந்த வாய்ப்பை பலவீனப்படுத்தியது.

அதன் பின்னர், லங்கா சமசமாஜக் கட்சி அதிகாரத்துக்கு வரும் வாய்ப்பை இழந்து, *1964* இல் தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இணைந்ததுடன், அதன் பின்னரும் முதலாளித்துவ அரசாங்கங்களின் பங்காளியாக மாறியது. இதனால் எழுந்த முரண்பாடுகளால், சமசமாஜக் கட்சியில் காலத்துக்குக் காலம் பல பிளவுகள் உருவாகி, சில சிறிய கட்சிகள் உருவாகின.

மறுபக்கத்தில், கம்யூனிஸ்ட் கட்சியையும் இந்தப் பிளவுகள் விட்டு வைக்கவில்லை. சோவியத் யூனியனில் ஸ்டாலினின் மறைவுக்குப் பின்னர் கட்சியினதும், அரசினதும் அதிகாரத்தைக் கைப்பற்றிய நிகிட்டா குருசேவ் மார்க்சிய – லெனினியப் பாதையைக் கைவிட்டதால், அதன் அடிப்படையில் உலகம் முழுவதுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் விவாதங்கள் உருவாகின. இந்த விவாதங்களுக்கு மாஓ சேதுங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை வகித்தது. இந்த விவாதங்கள் இறுதியில் உலகம் முழுவதுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் பிளவுகளை ஏற்படுத்தியது. அந்தப் பிளவு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஏற்பட்டது. சோவியத் சார்பு – சீன சார்பு என இரு அணிகளாக கட்சி பிளவுண்டது. பின்னர் இந்த இரு அணியினர் மத்தியிலும் (பிரதானமாக சீன சார்பு அணியினர் மத்தியில்) மேலும் பிளவுகள் ஏற்பட்டு, பின்னர் பிளவுண்ட அணிகளும் செயலிழந்து, இன்று தாய்க் கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பெயரளவினான ஒரு கட்சியாக எஞ்சி நிற்கிறது. அதன் அரசியலும் சமசமாஜக் கட்சி போல சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏதாவது ஒரு அணியின் தயவிலேயே இருந்து வருகிறது.

ஆக மொத்தமாக கூட்டிக் கழித்துப் பார்த்தால், இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் மிக மிகப் பலவீனமான நிலையிலேயே உள்ளன. பாராளுமன்ற சந்தர்ப்பவாதப் பாதையில் பயணித்து வரும் இந்தக் கட்சிகளின் மொத்த வாக்குவங்கியே சுமார் ஒரு வீதந்தான். இன்றைய நிலையில் இடதுசாரிகள் முதலாளித்துவக் கட்சிகளின் வால்களில் தொங்குவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாத நிலையிலேயே உள்ளனர். இவர்கள் தொங்குகின்ற முதலாளித்துவக் கட்சிகளும் கூட பல நெருக்கடிகளில் ஆழ்ந்துபோய் உள்ளன.

எது எப்படியிருப்பினும், இலங்கையின் இன்றைய நெருக்கடிக்கான தீர்வு இடதுசாரிப் பாதையிலேயே உள்ளது. எனவே, இப்பொழுது தேவையானது இலங்கையில் ஒரு பலமான, மக்கள் ஆதரவைப் பெற்ற, ஐக்கியப்பட்ட இடதுசாரிக் கட்சி ஒன்றைக் கட்டியெழுப்புவதே.

ஆனால், இலங்கையில் ஒருமித்த இடதுசாரிக் கட்சியொன்றை உருவாக்குவது என்பது 'மந்திரத்தால் மாங்காய் விழுத்தும்' வேலை அல்ல. எனவே, வானத்திலிருந்து 'எவரெடியாக' ஒரு புதிய இடதுசாரிக் கட்சி வந்து குதிக்க முடியாது. ஒரு இடதுசாரிக் கட்சிக்கான ஆரம்பப் பணிகளை தற்பொழுது இருக்கின்ற எல்லாவிதமான இடதுசாரி சக்திகளையும் ஒன்றுபடுத்துவதன் மூலமே முன்னெடுக்க முடியும். இதற்கு முதலில் தேவை, இந்தச் சக்திகளுக்கிடையிலான மனம் விட்ட கலந்துரையாடல். அதற்கடுத்ததாக, இந்தக் குழுக்கள் ஒரு பொதுவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு இணைப்பு அமைப்பாக ஒரு குறிப்பிட்ட காலம் செயற்படலாம். அதன் பின்னர் ஒரே அமைப்பாக மாறுவதற்கான வழிமுறைகளுக்குச் செல்வது பற்றி சிந்திக்க முடியும்.

இடதுசாரி சக்திகள் மக்கள் நலனை முன்னிலைப்படுத்திச் செயற்படுவதாக இருந்தால், அவர்களுக்கு முன்னால் இப்பொழுது பாரிய தடைகள் எதுவும் இல்லை. முன்னர் இடதுசாரிகளிடையே பிளவுக்கு காரணமாக அமைந்த ஸ்டாலின் – ட்ரொட்ஸ்க்கி பிரச்சினை இப்பொழுது ஒரு பிரதான பிரச்சினை அல்ல. அதேபோல, சோவியத் – சீன பிரச்சினையும் இன்று ஒரு பிரதான பிரச்சினை அல்ல.

இன்று இடதுசாரிகளுக்கு முன்னால் உள்ள பிரச்சினை என்பது, நாட்டிலுள்ள அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, பிற்போக்கு எதிர்ப்பு, இனவாத எதிர்ப்பு எதிர்ப்பு சக்திகளையும் ஓரணியில் திரட்டுவதுதான். இந்த அடிப்படையின் மூலமே இடதுசாரிகள் மீண்டும் பலமடையவும், நாட்டு மக்களை சரியான ஒரு மார்க்கத்தில் வழி நடத்தவும் முடியும்.

காலத்தின் கட்டாயம் இது. காலம் வழங்கியுள்ள சந்தர்ப்பமும் இதுதான். இடதுசாரிகள் இதை விளங்கிக் கொண்டு பற்றிப் பிடிப்பார்களா என்பதிலேயே இலங்கை இடதுசாரி இயக்கத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

---

வரலாற்றில் தனக்குரிய பாத்திரத்தை உணர்ந்து கொள்கிற பாட்டாளி வர்க்கம், மற்ற சுரண்டப்படும் வர்க்கங்களின் முன்னணி படையாக தன்னை அமைத்துக் கொள்கிறது. இந்த வர்க்கங்களில் முதன்மையானது குட்டி முதலாளி வர்க்கமாகும். பாட்டாளி வர்க்கம் அவ்வர்க்கங்களுக்குரிய தலைமையை வழங்குகிறது. அவர்களது ஆதரவை வென்றெடுக்கிறது அதேவேளை அந்த வர்க்கங்கள் தம்முடன் இயக்கத்துக்குள் கொண்டு வரும் ஊசலாட்டங்களையும் திசை விலகல்களையும் எதிர்க்கின்றது. பாட்டாளி வர்க்கமே ஒரு சுதந்திரமான பாட்டாளி வர்க்க கட்சியின் தலைமையின் கீழ் அமைப்புக்குள்ளாக்கப்பட்டு இருந்தால் தான் அதை சாதிக்க முடியும்.

**– லெனின்**

# மீண்டும் ஒன்று சேர்வோம்!




சீனாவின் ஒரு பகுதியான தாய்வானைச் சேர்ந்த 50 கட்சிகள் மற்றும் அமைப்புகள் மீண்டும் ஒரே சீனாவாக உருவெடுப்போம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்கள். பிளவுவாத சக்திகளுக்கும், அமெரிக்காவின் தலையீடுகளுக்கும் எதிராக ஒன்று சேர்ந்து போராட்டங்களை நடத்த பல அமைப்புகள் முடிவு செய்துள்ளன. தாய்வானை நிர்வகித்து வரும் டிசாய் இங்-வென் (Tsai Ing-wen) சில நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அப்பயணத்தின்போது அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையின் தலைவரும், குடியரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவருமான கெவின் மக்கார்த்தியைச் (Kevin McCarthy) சந்திக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த சந்திப்புக்கு தாய்வான் கூட்டமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கலிபோர்னியாவில் நடக்கும் டிசாய் இங்-வென் மற்றும் மக்கார்த்தி சந்திப்பு, அமைதியான முறையில் சீனா ஒன்றிணையும் பணியை பின்னுக்குத் தள்ளும். வேண்டுமென்றே சீன அரசைத் தூண்டிவிடும் வேலையைச் செய்கிறது என்று அந்த அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன. இந்த சந்திப்பு, தாய்வான் முழுவதும் மக்களைத் திரட்டி போராட்டங்களை நடத்துவதற்கு இட்டுச் சென்றுள்ளது என்று பல நகரங்களில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் பேசிய தலைவர்கள் குறிப்பிட்டார்கள்.

**ஒரு சீனம்தான் அடிப்படை**

கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரும், சீன இளைஞர் மேம்பாட்டு அமைப்பின் (China Youth Development Association) தலைவருமான வாங் ஜெங் (Wang Zheng) கூறுகையில், "இரு தரப்பின் அமைதி மற்றும் மேம்பாட்டிற்கும் அடிப்படையே ஒரே சீனம் என்பதுதான் அடிப்படையான கோட்பாடாகும். அனைவருக்குமே தெரிந்த விஷயம் ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால், சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் ஒரேயொரு சீனாதான் உள்ளது. தாய்வான் குறித்த கேள்வி உள்நாட்டு விவகாரமாகும். இருதரப்பும் அது குறித்து அமர்ந்து பேசிக்கொள்ள வேண்டும்" என்றார்.

**தாய்வானை அழிக்க முயற்சி**

பினாமிப் போரைத் தொடுக்க குடியரசுக் கட்சியின் மக்கார்த்தி விரும்புகிறார் என்று குற்றம் சாட்டும் தாய்வான் இணைப்புக் கூட்டணியின் (Reunification Alliance Party) தலைவரான சி சியா-லின் (Chi Chia-Lin), "தாய்வானைப் போர்க் களத்திற்கு அழைத்துச் செல்வதன் மூலம், தாய்வானை அழிக்க அமெரிக்க அரசியல்வாதிகள் திட்டமிடுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். தாய்வானில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு ஏ.கே.47 துப்பாக்கியை வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் ஊக்குவிக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். அதேவேளையில், தாய்வான் மக்கள் அத்தகைய போரை விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். மக்கார்த்தியுடனான சந்திப்பை தாய்வான் தனிநாடு என்பதை முன்னிறுத்துவதற்காக தாய்வானின் டிசாய் இங்-வென் பயன்படுத்திக் கொள்கிறார் என்று குற்றம் சாட்டும் சி சியா-லின், "திட்டமிட்டே தூண்டி விடுகிறார்கள். கடந்த ஆண்டில் தாய்வானுக்கு நான்சி பெலோசி (Nancy Pelosi) பயணம் மேற்கொண்டதால் பெரும் நெருக்கடி உருவானது. மக்கார்த்திக்கு எத்தகைய அரசியல் அந்தஸ்து இருக்கிறது என்பது தெரிந்தே டிசாய் இங்-வென் சீர்குலைவு வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்" என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

**அமெரிக்காவை நம்பாதீர்**

"அமெரிக்காவை நம்புவதும், தாய்வான் தனி நாடு கோருவதும் தவறான பாதைகளாகும்" என்று கூறியுள்ள தாய்வான் தொழிலாளர் கட்சியின் (Labour Party) தலைவர் வு ஜங்-யுவான் (Wu Jung-yuan), "வர்த்தக, தூதரக மற்றும் நிதி மூலமாக சீனா மீது அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால், இவற்றால் சீனாவின் வளர்ச்சியை அவர்களால் தடுக்க இயலவில்லை. இதனால், தாய்வானை ஒரு கருவியாகப் பயன்படுத்த நினைக்கிறார்கள். வெறுக்கத்தக்க வகையில் அமெரிக்கா நடந்து கொள்கிறது. தாய்வானை முன்னால் நிறுத்தி, தங்கள் தாக்குதல்களை நடத்துகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

மிகவும் அற்புதமான சீனாவை, ஒற்றுமையின் மூலம்தான் உருவாக்க முடியும் என்றும், அமைதி மற்றும் வளர்ச்சியில் இருதரப்பு மக்களும் முனைப்போடு இருத்தல் அவசியம் என்றும் மேலும் பல அமைப்புகளின் தலைவர்கள் கூறியுள்ளனர். அமெரிக்காவின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போதே, சீனாவின் வளர்ச்சியைத் தடுக்கவே தாய்வானை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிகிறது என அவர்கள் தெரிவிக்கிறார்கள்.